Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 09 செவ்வாய்க்கிழமை (25.11.2014) பக்கங்கள் 20 ஓசை – 056

## அரசு பக்கம் சாயமாட்டேன்



(கொழும்பு)

நான் கட்சி தாவப் போவதில்லை. ஐக்கிய தேசியக் கட்சியாகிய எனது தாய் வீட்டை விட்டு ஒருபோதும் வெளியேற மாட்டேன் என்று திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் அரசுப் பக்கம் தாவுகிறேன் என்று வெளியான தகவல்கள் அனைத்தும் பொய்யானவை. தான் ஐ.தே. கட்சியிலிருந்து விலகப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார் ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க.

இதுகுறித்து குறுகிய செய்திக் குறிப்பொன்றை அவர் வெளியிட்டுள்ளார். இதேவேளை ஐ.தே.க.வைச் சேர்ந்த இரண்டு "பாலித" க்களும் அரசுப் பக்கம்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஐரோப்பிய ஒன்றிய தடையால் யாழ். மீனவர்களுக்கும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய ஒன்றியத்தினால் அண்மையில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மீன்களுக்கு தடை விதிககப்பட்டமையால் மீனவர்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். கடற்றொழில் கூட்டுறவுச் சங்க சமாச தலைவர் எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

அண்மையில் விதிக்கப்பட்ட தடையால் மீனவர்களின் வருமானம் பெருமளவில் பாதிப்படைந்துள்ளது. உதாரணமாக வளையா என்ற இளவலை மீன் 25 முதல் 80 கிலோகிராம் வரை வளரக்கூடியது.

இதன் ஏற்றுமதி விலை கிலோ ஒன்றுக்கு 1200 ரூபா வரையில் இருந்தது. இதை ஏற்றுமதி செய்வதில் ஏற்பட்ட தடையால் தற்போது உள்நாட்டில் 600, 700 ரூபா வரையிலேயே விற்கப்படுகின்றது.

19 ஆம் பக்கம் பார்க்க



# நிறைவேறியது "பட்ஜெட்"

**ஆதரவு - 152**

**எதிராக - 57**

(கொழும்பு)

அடுத்த ஆண்டுக்கான புதிய வரவு செலவுத் திட்டம் நேற்று நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த மாதம் புதிய பட்ஜெட்டை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

இலங்கை அரசாங்கத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 95 பெரும்பான்மை வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது.

152 பேர் பட்ஜெட்டுக்கு ஆதரவாகவும், 57 பேர் எதிராகவும் வாக்களித்துள்ளனர்.

அரசாங்கத் தரப்பிலிருந்து மைத்திரிபால சிறிசேன, ராஜித சேனாரத்ன உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் வெளியேறியிருந்த நிலையில், இந்த பட்ஜெட் மீதான இறுதி வாக்கெடுப்பு பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின்

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண சபை கூட்டமைப்பிடம் சென்றது தமிழ் மக்களின் சாபக்கேடு



(கொழும்பு)

வடக்கு மாகாண ஆட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசம் சென்றடைந்தமை வடக்கு தமிழ் மக்களின் சாபக்கேடு. இதனால் 13 ஆவது அரசியல் திருத்தம் ஊடாக தமிழ் மக்களுக்கு கிடைக்கவிருந்த விமோசனங்கள் அனைத்தும் தடைப்பட்டுக் கிடக்கின்றது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது,

எனது அரசியல் வரலாற்றில் நான் பல்வேறு அரச ஆட்சித் தலைவர்களை சந்தித்திருக்கிறேன். பழகியுமிருக்கிறேன்.

தமிழ் பேசும் மக்களை அழிவுகளில் இருந்து மீட்டெடுக்கவும், எமது மக்களுக்கு நிரந்தர சமாதானத்தையும், நிரந்தர அரசியல் தீர்வையும் உருவாக்கிக் கொடுப்பதற்கும், எமது மக்களின் உரிமைக்குக் குரல் கொடுத்தபடியே அவர்களுக்கு நான் உறவுக்குக் கரம் நீட்டியிருக்கின்றேன்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவைக் கேட்டோம்.

அதன் பின்னர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரண

19 ஆம் பக்கம் பார்க்க

## எந்த வேட்பாளருக்கும் நேரடி ஆதரவு இல்லை

### ஜே.வி.பி அறிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளருக்கும் நேரடியான ஆதரவை வழங்கப்போவதில்லை என்று ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை தவிர வேறு எந்த வேட்பாளருக்காவது வாக்களியுங்கள். இவ்வாறு ஜே.வி.பி. மக்களை கோரியுள்ளது. பத்தரமுல்லையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எந்த வேட்பாளருக்கும் நாங்கள் உரிமை கோரவில்லை. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு நாங்கள் முக்கிய கட்சியுமில்லை. ஆனாலும், சர்வாதிகார ஆட்சி மீது மக்கள் தங்கள் சீற்றத்தை வெளிப்படுத்த இது நல்ல சந்தர்ப்பம். அரசாங்கத்தின் தேர்தல்

19 ஆம் பக்கம் பார்க்க

## வன்னி அமைப்பாளராக ரோஹன கமகே

### நியமித்தது ஐ.தே.க.

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி தேர்தல் மாவட்ட அமைப்பாளராக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ரோஹன கமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி வன்னி மாவட்டத்தில் பின்னடைவுகளை சந்தித்தது.

கட்சிக்கான ஆதரவை அதிகரித்து மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் நோக்கில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ரோஹன கமகே, ஸ்ரீபதி சூரியாராச்சியுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியில் அரசியல் பயணத்தை ஆரம்பித்தார்.

அத்துடன் அவர் இலங்கை கடற்படையின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரியாகவும் சேவையாற்றியுள்ளார்.

## பொலிஸ் அலுவலர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவில் பணியாற்றி வந்த கான்ஸ்டபிள் தர உத்தியோகத்தர் ஒருவர் அவரது விடுதியிலிருந்து நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை தெஹியத்தகண்டியைச் சேர்ந்த என்.ரத்நாயக்க (வயது - 27) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

விடுமுறையில் சொந்த ஊருககுச் சென்ற மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர், கடந்த ஞாயிற்றுக்கிழமை மீண்டும் பணிக்கு திரும்பியிருந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.

## மகாநாயக்க தேரர்களை சந்தித்தார் மைத்திரி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிடவுள்ள மைத்திரிபால சிறிசேன கண்டி மல்வத்தை மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை சந்தித்துள்ளார்.

சிங்கள மக்கள் தாம் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்தக்கூடியவர்கள் இந்த மகாநாயக்க தேரர்கள் என்று கருதப்படும் நிலையில், சிறிசேனவின் இந்தச் சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக பார்க்கப்படுகிறது.

19 ஆம் பக்கம் பார்க்க



# 180 நாள் சுற்றறிக்கையின்பிரகாரம் நிரந்தர நியமனத்திற்கு ஆவன செய்க

**அமைச்சர் டக்ளஸ் ஊடாக சமர்ப்பித்து விரைந்து நடவடிக்கை எடுப்பேன் - தவராசா**



(யாழ்ப்பாணம்)

மலேரியா தடுப்புத்திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றி வருவோருக்கு அவர்களது சேவை தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்டு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினூடாக மத்திய அரசுடன் பேசி நிரந்தரமாக்குவதற்கு ஆவண செய்யப்படும்.

வடமாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா இவ்வாறு தெரிவித்தார். அமைய அடிப்படையில் மலேரியா தடைச்சட்டத்தில் கடமையாற்றும் 67 பேர் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.செயலகத்தின் முன்னால் போராட்டத்தை நடத்தி தமது நியமனத்தை வழங்க ஆவண செய்யுமாறு கோரி அமைச்சருக்கான மகஜரை சி.தவராசாவிடம் வழங்கியதன் பின்னர் அவர தெரிவிக்கையில்,

பல ஆண்டுகளாக பிராந்திய சுகதாரா அமைச்சின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் சேவை செய்கின்றனர். தமது நியமனத்தை நிரந்தரமாக்குமாறு தமது அதிகாரிகளை கோரிய போது தட்டிக்கழித்துள்ளனர்.

ஜனாதிபதியின் வரவு செலவுத்திட்ட உரையின் போது அமைய அடிப்படையில் 180 நாட்கள் சேவை செய்த அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என தெரிவித்ததுடன், 12.11.2014 சுற்றறிக்கையும் வெளியடப்படப்பட்டுள்ளது.

இதற்கமைய தமது நியமனங்களையும் நிரந்தரமாக்குமாறு கோரியுள்ளனர். அவர்களின் கோரிக்கை நியாயமானது ஆனாலும் அவர்கள் கடமையாற்றியமை குறித்து எம்மிடம் சமர்ப்பியுங்கள். உங்களின் பிரச்சினைகள் குறித்து உரிய இடத்திற்கு தெரியப்படுத்தி நிரந்தர நியமனத்திற்கு ஆவண செய்வோம் என தெரிவித்ததாக அவர் கூறினார்.

இதேவேளை தமக்கான நிரந்தர நியமனம் குறித்து தமது நிலைமையை வெளிப்படுத்தும் வகையில் சுலோக அட்டைகளுடன் போராட்டத்திலும் ஈடுபட்டனர். (இ,25)

# புதிய மீன்சந்தைக்கு நேற்று அடிக்கல் நாட்டு



(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைப்பகுதிக்கான மீன் சந்தைக்கான அடிக்கல் நேற்று நாட்டப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை சந்திப்பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாநகரசபையின் முன்னாள் துணை முதல்வர் துரைராசா இளங்கோ(றீகன்) கொழும்புத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த பா.கு.சேனாதிராஜா ஆகியோர் இணைந்து இதற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தனர்.

இந்த மீன் சந்தைக்கு முதற் கட்டமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த மீன்சந்தை விரிவாக்கத்திற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முன்[illegible] யாழ்.மாநகரசபை துணைமுதல்வர் றீகன் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கொழும்புத்துறை மீன் சந்தை தற்காலிக கட்டடம் ஒன்றிலேயே இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

# கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு டெங்குத் தாக்கம்


## இந்த மாதம் மட்டும் 145 பேர் அனுமதி

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மட்டும் 12 பேர் டெங்கு நோய்த்தொற்றிற்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கந்தர்மடம், கொக்குவில், கோப்பாய், சண்டிலிப்பாய் உட்பட பல்வேறு பகுதிகளிலும் இருந்தே இவர்கள் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவ்வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் பருவ மழை பெய்துவரும் சூழலில் இந்நோயின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் சாத்தியங்கள் தென்படுவதாக சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர். இம்மாதம் இந்நோயினால் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 145 ஆக அதிகரித்துள்ளது. (பா)

# பனை மட்டைகள் படகு மூலம் தருவிப்பு



(யாழ்ப்பாணம்)

பூநகரி, கௌதாரி முனையில் இருந்து கொழும்புத்துறைக்கு பனை மட்டைகள் படகுகளில் எடுத்துவரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

இவ்வாறு எடுத்துவரப்படும் நூறு மட்டைகளைக் கொண்ட ஒரு கட்டு மட்டைகள் 700 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் பயிர்ச்செய்கையின் போது விவசாய நிலங்களைப் பாதுகாப்பதற்காக வேலியிடவும், குடியிருப்புக்களுக்கான வேலியிடுவதற்கும் பனைமட்டை பயன்படுத்தப்படுகிறது. (பா)

# மக்கள் பங்கேற்பு திட்டம் பளையில் விரிவாக ஆராய்வு

## ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கருத்துப்பகிர்வு

(பளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் திட்டங்களை ஆராயும் அபிவிருத்திக்கூட்டம் நேற்று பிரதேச சபையில் நடைபெற்றது.

பிரதேச சபைத் தலைவர், செயலாளர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதில் மக்கள் பங்கேற்பு, அபிவிருத்தித்திட்டம் தொடர்பில் 18 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுடன் விரிவாக கலந்துரையாடப்பட்டது. இதில் கிராம அலுவலர்களும் கலந்துகொண்டனர். (37)

# புதிய நிர்வாகம்

2015 ஆம் ஆண்டிற்கான தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு சேவாலங்கா மன்றத்தின் திட்ட அனுசரனையுடன் பிரதேச இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் க.சிந்துஜன் தலைமையில் புதிய நிர்வாகத்தெரிவு த[illegible] வித்தியாலயத்தில் ந[illegible] பெற்றது.

இப்புதிய நிர்வாக தெரிவுக் கூட்டத்தில் இளைஞர்களும் ஏனைய கிராம மட்ட அமைப்புக்களின் உறுப்பினர்களும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

இதில் பிரதேச இளைஞர் சேவைகள் உத்தியோகத்தரினால் இளைஞர் கழக எதிர்கால செயற்பாடுகள் பற்றி பூரண விளக்கமும் அளிக்கப்பட்டது.



வேலணை, துறையூர் ஹரிஹரபுத்தி ஐயனார் ஆலயத்திற்கு வேலணையைச் சேர்ந்த அமரர் கந்தசாமியின் ஞாபகர்த்தமாக அவரது குடும்பத்தினர் தண்ணீர்ப்பந்தல் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நேற்று நாட்டப்பட்டது. இதில் அடிக்கல் பூஜை இடம்பெறுவதனையும், ஐயப்ப பக்தர் ஒருவர் அடிக்கல் நாட்டுவதனையும் காணலாம். (21)

**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக்**

**றீசைக்கிள் (மீள் சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக். பொலித்தீன் என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி
அருகாமை)
021 222 8680,
077 592 5088.

(C/3800)

**யாழ். சமூக செயற்பாட்டு மையம்**

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

பெண்களின் வன்முறைகளில் நாம் சாதித்தவை ஒன்றுமில்லையெனில், எண்ணங்களில் மாற்றம் கொள்வோம். வன்முறையற்ற சமுதாயத்தை மலரச் செய்வோம்.

JSAC 16 2014

# பொது அறிவு விடயங்களை கற்பதன்மூலம் உயர் பதவிகளைப் பெறமுடியும்

## குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

பொது அறிவு நுண்ணறிவு சார்ந்த விடயங்களை மாணவர்கள் சிறுவயதில் இருந்தே பெற்றுக்கொள்வதன் மூலம் அரச நிர்வாக சேவை போட்டிப் பரீட்சைகளில் சித்திபெற்று உயர் பதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபை நடாத்திய மாணவ முதல்வர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய கல்லூரியின் பழைய மாணவனும், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரியுமான ஆர்.ராஜ்குமார் குறிப்பிட்டார்.

சிரேஷ்ட மாணவ முதல்வர் ரி.சுபேசன் தலைமையில் கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் தொடர்ந்து பேசுகையில்,

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களை வைத்துக் கொண்டு உயர்பெறுபேறுகளைப் பெறும் பாடசாலை என்ற பெயரைத் தக்க வைத்துக் கொண்டிருக்கும் நகர்ப் புறத்துப் பெரிய பாடசாலைகளின் மத்தியில் அடிப்படை வசதிகளே இல்லாத சாதாரண ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளைக் கற்பித்து வல்லவர்களாக்கும் பணியினை இது போன்ற பல பாடசாலைகள் செய்து வருகின்றன.

பொருளாதாரச் சிக்கல் உள்ளிட்ட பல சவால்களை எதிர்கொண்டு பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் செல்லும் இந்தப் பாடசாலையின் ஒருசில மாணவர்கள் பெரிதும் பாராட்டப்படவேண்டியவர்கள்.

வறுமை என்பது வாழ்க்கையில் உயர்வதற்கும் தேவையான பல பாடங்களைக் கற்றுத்தரும். சவால்களைக் கண்டு பயந்து விடக்கூடாது. தோல்விகளைக் கண்டு துவண்டு விடக்கூடாது. தொடர்ந்து முயற்சி செய்தால் வாழ்க்கையில் முன்னுக்கு வரலாம். எமது வாழ்க்கை ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாக அமையவேண்டும்.

மாணவர்கள் சிறுவயதில் இருந்தே தமது ஆளுமை ஆற்றல்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். பொது அறிவு, நுண்ணறிவு சார்ந்த விடயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். கணனியும் ஆங்கிலமும் கைவரப் பெற்றால் உயர் பதவி தேடிவரும்.

இருக்கின்ற காலத்தில் அனைவருடனும் அன்பாக இருப்போம். எதிரிகள் எமக்கு வேண்டாம் என்று எல்லோரிடமும் அன்பாக நடந்து கொள்ளப்பழகிக்கொள்வோம் என்றார். (10)

# மலையகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிளிநொச்சி கல்விச் சமூகம் உதவி



மலையகத்தின் கொஸ்லாந்தை மீரியவத்தைப் பகுதியில் ஏற்பட்ட மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான ரீதியில் கிளிநொச்சி கல்வி வலயத்தால் சேகரிக்கப்பட்ட உதவிப் பொருட்களை கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி முருகவேள் தலைமையில் கல்வி அதிகாரிகள், உத்தியோகஸ்தர்கள் நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களிடம் கையளித்து அவர்களுக்கு ஆறுதல் கூறியதுடன் நிலமைகளையும் நேரில் பார்வையிட்டனர்.

# யாழிலுள்ள 10 பாடசாலைகளில் நாவலர் சிலை அமைக்க ஏற்பாடு




(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதும் உள்ள முன்னணி தமிழ் பாடசாலைகள் தோறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் திருவுருவச் சிலைகளை நிறுவுவதன் மூலம் நாவலரின் சிறப்பை மாணவர்கள் மத்தியில் நிலைநாட்ட நடவடிக்கை எடுத்துவரும் நாவலர் நற்பணி மன்றம், எதிர்வரும் வாரங்களில் யாழ்ப்பாணத்திலும் 10 பாடசாலைகளில் நாவலர் சிலைகள் நிறுவத் திட்டமிட்டிருக்கின்றது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அனுசரணையுடன் யாழ்.சுழிபுரம் விக்டோரியா கல்லூரி, காரைநகர் தியாகராஜா இந்துக் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவை உட்பட 10 பாடசாலைகளில் நாவலர் சிலைகள் நிறுவப்படவுள்ளன. கொழும்பிலும் மலையகத்திலும் மாத்தளை, நாவலப்பிட்டி, கொட்டகல போன்ற இடங்களிலும் அண்மையில் பல நாவலர் சிலைகள் இந்த அமைப்பினரால் நிறுவப்பட்டுள்ளன.

நாவலர் நற்பணி மன்றம் அதன் ஸ்தாபகத் தலைவர் கருணை ஆனந்தனின் வழிகாட்டலில் தமிழ் பாடசாலைகள் தோறும் நாவலர் சிலைகளை நிறு வும் பணியை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பதில் சொல்லக் கடமைப்பட்டோர் - 04




அரசியலில் மிகப் பெரிய கிங் மேக்கர்களாக தமிழ்புத்திஜீவிகளில் கொஞ்சப்பேர் இருந்து கொண்டு கஞ்சி காய்ச்சுகினம் அல்லவா! இவை மாதம் ஒருக்காலோ ரெண்டு தடவையோ எங்காவது கூடிப் பறைவினம். ரகசியமாக தொலைபேசிகளில அமர்ந்த குரலில அரசியல் ரகசியம் பருகிவினம்.

இல்லாவிட்டால் வேற பெயர்களில உள்ள மின்னஞ்சல்களில தகவல் பரிமாற்றங்களைச் செய்வினம்.

இதில கனபேர் யாழ்ப்பாணத்திலதான் இருக்கினம். புலம்பெயர் நாடுகளில இருக்கிற ஆட்கள் முகநூலிலையும் இணையத்தளங்களிலையும் தங்கட வித்துவத்தையும் விண்ணாணத்தையும் காட்டிக்கொண்டிருக்கினம்.

தேர்தல்காலத்தில இவை அவசர அவசரமாக அறிக்கைகளை விடுவினம். தனிப்பட தொலைபேசி எடுத்து சில ஆலோசனைகளைக் கூட வைச்சுப் பாப்பினம்.

இவை சொல்லிறதை எவனும் கணக்கில எடுக்கமாட்டாங்கள்.

அதிலையும் பதவிக்கு வந்த எவனும் எந்தத் தமிழ் புத்திஜீவியின்ரை கதையையும் கேட்டதாகச் சரித்திரமே இல்லை.

ஆனாலும் சற்றும் தளராத விக்கிரமாதித்தன்களாக இந்தப் புத்திஜீவிகளும் தங்களால் முடிஞ்ச அளவுக்கு எதையாவது சொல்லிக்கொண்டுதானிருப்பினம்.

இவ்வளவுக்கும் இந்தப் புத்திஜீவிகள் எல்லாம் தங்கட காரியத்தில வலு கண்ணுங்கருத்துமாக இருந்து கொள்ளுவினம். உத்தியோகம் பார்க்கிறது, உத்தியோகத்தில பதவி உயர்வுகளைப் பெறுகிறது, பிள்ளைகளைப் பெரிய பள்ளிக்கூடங்களில படிப்பிக்கிறது, யாழ்ப்பாணத்தில மத்தியதர வர்க்கத்திலயோ அல்லது அதுக்கு மேலயோ வாழ்க்கைத்தரத்தை வைச்சுக்கொள்ளிறது, உயர்குடித்தன்மையை விட்டுக்கொடாமல் பேணுகிறது, தாங்கள் இனத்துக்காக எப்பவும் சிந்திக்கிற ஆட்கள் எண்டதைக் காட்டிக் கொள்ளிறது... இப்பிடியே இவையின்ரை தேசிய (தமிழ்த்தேசிய) சேவை நடந்து கொண்டிருக்கு.

இவ்வளவுக்கும் இவை இந்த மண்ணுக்காகவோ மக்களுக்காகவோ ஒரு நாளைச் செலவழிச்சிருக்க மாட்டினம். ஒரு மசிரைக் கூட இழந்திருக்க மாட்டினம்.

ஆனால், நடந்த யுத்தத்தைப்பற்றி கண்கள் சிவக்க, உதடுகள் துடிதுடிக்கக் கோபாவேசமாகக் கதைப்பினம். சர்வதேச அரசியலைப்பற்றி, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைகளைப்பற்றி, அரசியல் அமைப்பைப்பற்றி, போர்க்குற்றங்களைப் பற்றி, அரசாங்கத்தின்ரை நடத்தையைப்பற்றி, தமிழீழத்தைப்பற்றி, பிரிந்து செல்லும் உரிமைகளைப்பற்றி எல்லாம் அக்கு வேற ஆணி வேறயாக ஆக்கிக்கொண்டிருப்பினம்.

வேலையோ ஏஸி அறைகளில. அரசியல் ஆய்வோ ஒய்வு நேரங்களில.

இப்பிடியெல்லாம் இருக்கிற இந்தப் புத்திஜீவிகளிட்டயும் நாங்கள் சில கேள்விகளைக் கேட்கத்தானே வேணும்.

1. இத்தனை நாளாக அரசியலை அலசு அலசெண்டு அலசிக் கொண்டிருக்கிற நீங்கள், என்னமாதிரியான தீர்வுத்திட்டத்தைத் தயாரிச்சு வைச்சிருக்கிறீங்கள்? அப்பிடி எதையாவது வைச்சிருந்தால் அதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிட்ட மன்னிக்கோணும் தமிழரசுக்கட்சியிட்டக் குடுத்திருக்கலாமே!

2. தமிழரசுக் கட்சியை உங்களில கனபேர் பெரிசா நம்பேல்ல எண்டதும் தெரியும். ஆனால், நீங்கள் எல்லாம் தமிழரசுக்கட்சிக்குத்தான் வாக்குப் போட்டனீங்கள் எண்டதும் தெரியும். ஏனெண்டால் அப்பிடி வாக்குப்போடாமல் விட்டிட்டால் நீங்கள் விரும்பாத சக்திகள் வெண்டிடும் எண்டதுக்காக இப்பிடிச் செய்தனீங்கள் எண்டதும் தெரியும். ஆகவே நீங்கள் வாக்குப்போட்டு வெல்ல வைச்சவையிட்ட விரும்பியோ விரும்பாமலோ உங்கட அரசியல் தீர்வுப் பொதியைக் குடுத்தால் என்ன?

3. போர்க்குற்ற விசாரணையைப் பற்றி எந்த நேரமும் யோசிச்சுக் கொண்டிருக்கிற நீங்கள், இதுவரையில அதைப்பற்றி எங்காவது பகிரங்கமாக வாய்திறந்து கதைச்சிருக்கிறியளா? சின்னப்பெடியளாக இருக்கிற பேப்பர்காரர் எழுதிற அளவுக்கு நீங்கள் பகிரங்கமாக ஒண்டையும் கதைக்கிறேல்ல. ஏனெண்டால் பயம். அரசாங்க உத்தியோகம் பறிபோயிடும் எண்ட கலக்கம். இல்லாட்டில் வங்கியிலயோ கொம்பனியிலயோ வேலை போயிடும் எண்ட அச்சம். இல்லாட்டிக்கு வெளிநாடுகளுக்கு அடிக்கடி போய்வரேலாமல் போயிடும் எண்ட தயக்கம். இந்தக் காரணங்களால உள்ளுக்குள்ள நல்லா அடக்கி வாசிக்கிறியள். வெளியில சாதுவாக இருக்கிறதாகக் காட்டிக்கொள்ளிறியள். இதுக்குள்ள சனங்களை மெல்லக் கிள்ளி விட்டுக் கொள்ளிறியள்.

4. பென்னாம் பெரிய புத்திஜீவிகள், அரசியல் அறிஞர்கள், தமிழ்த்தேசியப் பற்றாளர்களாகிய நீங்கள் அரசாங்கத்தையோ சிங்கள இனவாதிகளையோ தோற்கடிப்பதற்குப் போர்வீரர்களாக ஒன்றும் கஸ்ரப்பட வேண்டாம். அதை நீங்கள் செய்யப்போவதும் இல்லை. (உங்களின் பெரிய பதவிகளையும் அவற்றின் வருவாயையும் அதனால் கிடைக்கிற சொகுசு வாழ்க்கையையும் நீங்கள் வேலை செய்கிற இடங்களில் உள்ள ஏஸி அறையையும் நீங்கள் விட்டுவிட்டு வரமாட்டீர்கள் என்று தெரியும்) குறைந்த பட்சம் தமிழ்ச் சக்திகளையும் கட்சிகளையும் ஒன்றிணைக்க உங்களால் முடியுமா?

நீ இருக்கும் வரை மரணம் வரப்போவது கிடையாது. மரணம் வந்த பிறகு நீ இருக்க போவது கிடையாது.

- தத்துவஞானி சோக்ரடீஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628. கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811. thinamurasu@live.com
Online : www.emurasu.com

## முடியாது என்றால் முடியாதுதான்!

நமது மக்களின் துன்பங்கள் தொடர்வதற்கும், பிரச்சினை தீராமலிருப்பதற்கும் நம் ஒவ்வொருவரிடமும் வெவ்வேறு காரணங்கள் இருக்கக் கூடும்.

சிலர் இப்போதிருக்கும் அரசாங்கம்தான் காரணம் என்று சொல்லக்கூடும். இன்னும் சிலர் இந்த நாட்டில் இதுவரை இருந்த, இனி வரப்போகும் எல்லா அரசாங்கங்களுமே காரணமென்னக் கூடும்.

வேறு சிலர் இந்தியாவையும் அதேபோல் அமெரிக்காவை, சீனாவை, ஐ.நாவை, முழு சர்வதேசத்தையும் விரல் நீட்டக் கூடும். மேலும் பலர் இந்த எல்லாமே காரணங்கள்தான் என்று விளக்கம் வைத்திருக்கக் கூடும்.

யார் கண்டது, சோதிடத்தை, கிரக பலன்களைக் காரணமாய்ச் சொல்லக் கூடியவர்களும் இருக்கக் கூடும்.

நம்மிடமிருந்த – நம்மிடம் இருக்கும் பிழைகளும்தான் காரணம் என்று இப்போதாவது சிலருக்கேனும் தோன்றலாம். இவர்களோடுதான் இந்த விஷயம் குறித்து நாம் விவாதிக்க முடியும்.

தமிழ் மக்களின் தலைவர்களாகச் சொல்லிக் கொள்பவர்கள், மற்ற எல்லோரினதும் பிழைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, தாங்கள் செய்யவேண்டிய முயற்சியைச் சொல்கிறார்களுமில்லை; செய்கிறார்களுமில்லை.

உதாரணத்துக்கு, இலங்கை அரசாங்கமோ, இந்தியாவோ, சர்வதேசமோ என்ன தீர்வைச் சொல்கின்றன என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர, இவர்கள் தாங்கள் கேட்கும் தீர்வு என்ன என்பதை வரையறுத்துச் சொல்வதில்லை.

இவர்கள் ஒரு தீர்வுத் திட்டத்தை வைத்து, அதற்கு இந்தியாவின், சர்வதேசத்தின் ஆதரவைத் திரட்டி முயற்சிப்பதை விட்டுவிட்டு, இந்த நாட்டில் தீர்வொன்று சாத்தியமேயில்லை என்ற அவநம்பிக்கையையே வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எதுவும் சரிவரப் போவதில்லை என்பதைச் சொல்ல எமக்கு எதற்குத் தலைவர்கள்?

இவர்கள் தங்களால் முடியும் என்று நம்பி எதையும் செய்வதில்லை; எதுவும் முடிந்துவிடக் கூடாதே என்று நினைத்துக் கொண்டே செயற்பட்டால் எதுதான் சாத்தியப்படும்?

முதலில் நமது தேவை என்னவென்பதை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். அதற்கான ஆதரவை நாட்டுக்குள்ளும் சர்வதேச ரீதியாகவும் திரட்டிக்கொண்டு நம்மால் பேசி, இணங்க வைத்து எடுக்க முடியும் என்று நம்பிக்கை கொள்ளாமல் எதையும் சாதிக்க முடியாது.

முடியும் என்று மனதை வைத்தால்தான் எதையும் முடிக்க முடியும் என்பதற்கு இந்த உதாரணம் சொல்லப்படுவதுண்டு.

30 அடி நீளமும் ஒரு அடி அகலமும் கொண்ட ஒரு பலகையை நிலத்தில் போட்டுவிட்டு நடக்கச் சொன்னால், பலகையின் ஒருபுறத்திலிருந்து மறுபுறத்திற்கு அடிசறுக்காமல் எவராலும் நடந்துசெல்ல முடியும்.

ஆனால் இதே பலகையை உயர்ந்த இரு கோபுரங்களுக்கிடையே ஆகாயத்தில் வைத்துவிட்டு அவ்வளவு உயரத்தில் நடக்கச் சொன்னால், இரண்டடி நடக்கு முன்னரே கைகால்கள் நடுங்கத் தொடங்கும். சில அடிதூரம் நடப்பதற்குள் கால்கள் பின்னி விழுந்துவிட நேரும்.

காரணம் இதுதான்: பலகை நிலத்தில் கிடக்கும்போது நடப்பது இலகுவென்று மனம் நினைக்கிறது. ஆனால் உயர்த்தப்பட்டதும், நாம் விழுந்துவிடுவோம் என்று மனம் நினைக்கிறது. உடனே பயத்தால் நடுங்குகிறோம். நாம் விழப்போகிறோம் என்ற எண்ணம் தோன்றியதும் அதற்கு முன்னால் நமது முயற்சிகள் வீணாகிவிடுகின்றன; தோல்வி பெறுகின்றன.

ஆமாம், நம்மால் முடியாது என்று எண்ணினால்... முடியாது தான்.

- ஆசிரியர்



## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

“மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வறட்சி நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை”

——— ஜோன் முர் (அமெரிக்க இயற்கையியலாளர்)

# சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்க பெற்றோரின் விழிப்புணர்வு அவசியம்

## மானிப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகுவதை கட்டுப்படுத்துவதற்கு பெற்றோர்களே அதிக கடப்பாட்டுடன் செயற்படவேண்டும். சிறுவர்களை துஷ்பிரயோகங்களில் இருந்து பாதுகாப்பது பெற்றோர்களின் கைகளில் உள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். ஏ.டி.றொஹான் மகேஷ் நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் பொறுப்பதிகாரி மேலும் தெரிவிக்கையில்,

பெற்றோர்களே தமது பிள்ளைகளின் முதலாவது நண்பர் ஆவார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் எதிர்காலம் தொடர்பில் அக்கறை கொண்டவர்கள். ஆகவே பிள்ளைகளின் செயற்பாடுகள் தொடர்பில் பெற்றோர்கள் கவனம் செலுத்தவேண்டும்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் ஏனைய பொலிஸ் பிரிவுகளைவிட மிகக்குறைவாகவே காணப்படுகின்றன. மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அனைத்து பாடசாலைகளிலும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

அத்துடன், மாதந்தோறும் இடம்பெறும் சிவில் சமூக பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி, அதில் கலந்துகொள்ளும் பெற்றோர்களுக்கு அறிவூட்டும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன்மூலம் எமது பொலிஸ் பிரிவில் 80 வீதமான அளவிற்கு சிறுவர் துஷ்பிரயோகங்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளோம்.

யாழ். மாவட்டத்திலுள்ள சிறுவர்களிடம் தொலைபேசி பாவனை அதிகரித்துள்ளமையே, சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணம் ஆகும். பெற்றோர்கள் ஒன்றை கவனத்தில் எடுக்க வேண்டும். உங்கள் பிள்ளைகள் தொலைபேசியில் உரையாடும் போது, அவர்கள் யாருடன் உரையாடுகின்றனர், என்ன உரையாடுகின்றனர் என்பதை அவதானிக்க வேண்டும்.

அத்துடன், பிள்ளைகள் தொலைபேசியில் என்ன பார்க்கின்றார்கள் என்பது தொடர்பிலும் அவதானமாக இருக்க வேண்டும். பிள்ளைகள் சரியான முறையில் நடந்துகொண்டாலும் பிற சூழல் காரணிகள் பிள்ளைகளை துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்குகின்றன.

பெண் பிள்ளைகள் மட்டும் தான் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகின்றார்கள் என்று எண்ணக்கூடாது. ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளுக்கு நிகராக துஷ்பிரயோகத்துக்கு ஆளாகும் சம்பவங்கள் யாழ் மாவட்டத்தில் அதிகம் இடம்பெற்று வருகின்றன.

அவை ஊடகங்களில் வெளிவருவதில்லை. ஊடகங்கள் அனைத்தும் பெண்பிள்ளைகள் துஷ்பிரயோகத்துக்கு ஆளாவதனை மட்டுமே செய்திகளாக வெளியிடுகின்றன. பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லும் போதும், வரும் போதும் சக மாணவர்களுடன் ஒன்றாக தமது பிள்ளைகளை பெற்றோர்கள் அனுப்பவேண்டும். அத்துடன், பிள்ளைகளை வீட்டில் தனியாக விட்டுச் செல்லாமல், நம்பிக்கையான பெரியவர்களுடன் பிள்ளைகளை விட்டுவிட்டுச் செல்ல வேண்டும் என பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

## மாஞ்சோலை வைத்தியசாலையில் மின்னொழுக்கால் பற்றியது தீ

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மாஞ்சோலை மாவட்ட வைத்தியசாலையில் நேற்றுக் காலை திடீரென்று ஏற்பட்ட மின்னொழுக்குக் காரணமாக தீ பரவியமையால், வைத்தியசாலையின் கதிரியக்கப்பிரிவு (எக்ஸ்ரே பிரிவு) சேதமடைந்துள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வைத்தியசாலையில் புகை மண்டலம் காணப்பட்டதாகவும் இந்த நிலையில், இராணுவத்தினரின் உதவியுடன் வைத்தியசாலை ஊழியர்கள் தீயை அணைத்தனர்.

இதனால், கதிரியக்கப் பிரிவில் வைக்கப்பட்டிருந்த இயந்திரமொன்றும் தீயில் கருகியுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மீள்குடியேற்ற அமைச்சினால் கிளி.இல் கிணறுகள் அமைப்பு

மீள்குடியேற்ற அமைச்சின் 16.55 மில்லியன் ரூபாய் நிதியுதவியில், கிளிநொச்சி மாவட்டத்தில் 295 மலசலகூடங்களும் 10 பொதுக்கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலக திட்டமிடல் பிரிவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மலசலகூடங்கள், கிணறுகள் அமைப்பதற்கான நிதி, கடந்த ஏப்ரல் மாதம் மீள்குடியேற்ற அமைச்சால் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் மலசலகூடங்கள் அமைப்பதற்கான பயனாளிகள் தெரிவும், பொதுக் கிணறுகள் அமைப்பதற்கான இடங்கள் தெரிவும் இடம்பெற்றன.

இவற்றுக்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு, தற்போது 295 மலசலகூடங்களும் 10 பொதுக்கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2013ஆம் ஆண்டும் மீள்குடியேற்ற அமைச்சின் 14.8 மில்லியன் ரூபாய் நிதியில், கிளிநொச்சி மாவட்டத்தில் 200 மலசலகூடங்களும் 10 பொதுக் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கிளிநொச்சியிலும் கடும்காற்றுடன் மழை மாணவர்களின் பரீட்சை பாதிப்பு

(கிளிநொச்சி)

வடக்கில் தொடர்ச்சியாக பெய்துவரும் கனமழையால் கிளிநொச்சி மாவட்டத்தின் கிராமப்புற பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் பெரும் நெருக்கடியின் மத்தியில் பரீட்சை எழுதியதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது தரம் 9 இற்கு மாகாண மட்டப் பரீட்சையும் ஏனைய தரங்களுக்கு தவணைப் பரீட்சையும் நடைபெற்று வரும் நிலையில் தொடர்மழையினால் மாணவர்கள் பரீட்சை எழுதுவதில் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக உள்ளூர் கிராமங்களிலுள்ள பாடசாலைகள் பல இன்னமும் சீர்செய்யப்படாது கட்டடங்கள் தறப்பாள்களாலும் கிடுகளினாலும் வேயப்பட்டதால் மழை நீர் ஒழுக்குகளின் மத்தியில் மாணவர்கள் பரீட்சை எழுதுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சில பாடசாலைகளில் மாணவர்கள் ஈரநிலத்தில் இருந்து பரீட்சை எழுதும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (77)

# நெற்பயிரில் நோய் ஏற்பட்டால் உடனடியாக அறியத் தரவும்

## கிளி.விவசாய உதவித் திட்டப்பணிப்பாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் நெற் பயிர்களுக்கு நோய்த் தாக்கங்கள் ஏற்பட்டமை கண்டறியப்பட்டால் அது தொடரபில் கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்களத்துக்கு அறியத் தருமாறு கிளிநொச்சி மாவட்ட விவசாய (விரிவாக்கல்) திணைக்கள உதவித்திட்டப்பணிப்பாளர் ஏ.செல்வராஜா, நேற்றுமுன் தினம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

நெற்பயிர்களுக்கு நோய்த் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் எவரும் இதுவரையில் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யவில்லை.

நெற்பயிர்களுக்கு எரிபண்டம், மடிச்சுக்கட்டி ஆகிய நோய்த தாக்கங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன.

எனினும் இது தொடர்பில் இதுவரையில் விவசாயிகள் முறைப்பாடுகள் எதுவும் தெரிவிக்கவில்லை. நோய்த் தாக்கங்கள் குறித்து விவசாய (விரிவாக்கல்) திணைக்களத்துக்கு அறியத்தந்தால், அவற்றை கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முறைப்படி மேற்கொள்ளலாம். நோய்த் தாக்கங்கள் அனைத்துக்கும் கிருமிநாசினிகளை பயன்படுத்தக்கூடாது. எனவே விவசாயிகள் நோய் தாக்கங்கள் குறித்த விவசாய திணைக்களத்தில் முறைப்பாடு தெரிவிக்கலாம் என அவர் மேலும் கூறினார்.

# அநாகரிகமாக நடந்த நபருக்கு 100 மணிநேர சமுதாய வேலை

(யாழ்ப்பாணம்)

பொது இடத்தில் மதுபோதையில் அநாகரிமாக நடந்த ஒருவரை 100 மணித்தியாலங்கள் சமுதாய வேலையுடன் கூடிய சீர்திருத்தப் பணியில் ஈடுபடுமாறு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி சி.சதீஸ்கரன் உத்தரவிட்டார்.

பனிப்புலம் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் கடந்த 20 ஆம் திகதி இரவு மது அருந்திவிட்டு மல்லாகம் நகரப் பகுதியில் நின்ற பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்ததுடன். அநாகரிகமாகவும் நடந்துகொண்டார் எனக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து குறித்த நபர் தெல்லிப்பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை இவர் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

வழக்கில் அவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டதை அடுத்தே அவருக்கு மேற்படி தண்டனை வழங்கப்பட்டது.

அத்துடன் சமூக சீர்கேட்டில் ஈடுபடும் குற்றவாளிகள் திருந்தி வாழ போதுமான வழிகாட்டல், ஆலோசனை, ஆன்மீக, தொழில் வழிகாட்டல்கள் என்பன நீதிமன்ற வளாகத்தில் வழங்கப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# முல்லை - ஒட்டுசுட்டான் வீதியில் குறுக்கே நிற்கும் கால்நடைகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதான வீதியில் பகல் மற்றும் இரவு நேரங்களில் சுற்றித்திரியும் கட்டாக்காலிகளால் பல விபத்துச் சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



முல்லைத்தீவு தொடக்கம் மாஞ்சோலை, முள்ளியவளை ஊடாக, ஒட்டுசுட்டான் செல்லும் பிரதான வீதிவரையில் பகல் மற்றும் இரவு நேரங்களில் கட்டாக்காலிகளாக ஆடுகளும் மாடுகளும் கூட்டமாக சுற்றித்திரிவது, படுத்துறங்குவது என்பவற்றினால் அவ் வீதிகளின் ஊடாக பயணிக்கும் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிடுகின்றனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் மாடுகள் வீதியின் நடுவே நிற்பது மற்றும் படுத்துறங்குவது என்பவற்றினால் அடிக்கடி விபத்துச்சம்பவங்களும் இடம்பெற்று வருவதாகவும் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சம்பிக்க சிறிவர்தன மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபை என்பன கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் அதிகாரிகளுடனும் பொதுமக்களுடனும் கலந்துரையாடியதுடன், அது தொடர்பில் தீவிர முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தனர். சிறிது காலம் குறைவடைந்த கட்டாக் காலிகளின் தொல்லை தற்போது மீண்டும் அதிகரித்துள்ளதாக பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.



யாழ்.ஊரெழு கலைவாணி முன்பள்ளி மாணவர்களின் கல்விக் கண்காட்சி கடந்த செவ்வாய்க்கிழமை முன்பள்ளி மண்டபத்தில் நிர்வாகி சி.இளங்கோ தலைமையில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், சிறார்களின் கலை நிகழ்வையும், விருந்தினர்கள் கண்காட்சியை பார்வையிடுவதையும் காணலாம். (48)

# பண்டிதர் பரீட்சை பெறுபேறு வெளியீடு

ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் கீழைத்தேயக் கல்விக்கல்லூரியால் நடத்தப்பட்ட பாலபண்டிதர், பண்டிதர் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்துள்ளன.

**பாலபண்டிதர் பரீட்சைப் பெறுபேறு,**

தாந்திப்பிள்ளை கோபாலகிருஷ்ணன், குமரன் வீதி களுவாஞ்சிக்குடி. (இரண்டாம் பிரிவு சித்தி), கெங்காதரஜயர் சர்வேஸ்வரன் ஈவினை புன்னாலைக்கட்டுவான் (முதற்பிரிவு சித்தி), தம்பிஜயா மனோஜ்குமார் செடடிவளவு இணுவில் மேற்கு (புனர் நூனசித்தி), கணேசமூர்த்தி மங்களமூர்த்தி அராலி தெற்கு வட்டுக்கோட்டை (புனர்நூன சித்தி),

**பண்டிதர் பரீட்சைப் பெறுபேறு,**

வெற்றிவேலு வரதராச்ன் சிந்துபுரம் வட்டுக்கோட்டை (இரண்டாம் பிரிவு சித்தி), தம்பி ஜயா மனோஜ்குமார் செட்டிவளவு இணுவில் மேற்கு (நூனசித்தி பாடவகை 01), அப்துல் ரகுமான் சுஜானாபேகம் உப்புக்குளம் மன்னார். (சித்தி), ஜெயகாந்தரர்ஜா மணிமலர் கோண்டாவில் மேற்கு கோண்டாவில் (சித்தி), திருமதி நவதீசன் உதயகலா சங்கானை மேற்கு சங்கானை (இரண்டாம் பிரிவு சித்தி), மார்க்கண்டு கணநாதன் அராலி வடக்கு அராலி வட்டுக்கோட்டை (சித்தி). (10)

## சட்டவிரோத மின்சாரம் பெற்றவர் கைது

யாழ்.பருத்தித்துறை தம்பசிட்டி பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற இருவரை நேற்றுமுன்தினம் பருத்தித்துறை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் கிளையைச் சேர்ந்த அதிகாரிகளுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே, இவ்விருவரையும் கைதுசெய்ததாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடகவியலாளர் மாநாட்டில் மன்றத்தின் செயற்பாடுகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன.

இந்த ஊடகவியலாளர் மாநாடு கடந்த புதன்கிழமை யாழ்.தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தின் உதவி இயக்குநர் ஐ.தபேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் மன்ற உறுப்பினர்களால் திட்டங்கள் மற்றும் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் குறித்து விளக்கமளிக்கப் பட்டது.

அதன் பிரகாரம் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கி வரும் இம்மன்றத்தின் செயற்பாடுகளில் யாழ்.ஊடகங்களுக்கும் முக்கிய பங்குண்டு. நாம் ஊடகங்களின் பங்களிப்புடன பலசெயற்றிட்டங்களை நடைமுறைபபடுத்தி செயற்படுத்தியுள்ளோம்.

மேலும் எதிர்காலத்தில் பல செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். குறிப்பாக கிராமங்கள் தோறும் இளைஞர் கழகங்களை அமைக்கவுள்ளதோடு துறைசார்ந்த திட்டங்களையும் உருவாக்கவுள்ளோம்.

மேலும் மன்றத்தினால் முன்னெடுக்கப்படும் விளையாட்டு விழாக்களை சிறப்புற நடாத்தியுள்ளோம் மற்றும் பல புதிய திட்டங்களை செயற்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனினும் குறித்த விவாதத்தினை இடைமறித்த யாழ்.மாவட்ட சம்மேளனத் தலைவர் விஜிதரன் சம்மேளனத்தின் சுயாதீன வேலைத திட்டம் எனக் குறிப்பிட்டபோது ஏன் என்னை உரையாற்ற விடவில்லை எனக் கேள்வி எழுப்பினார்.

பின்பு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், இந்த ஊடக மாநாட்டில் இதுவரை காலமும் செய்த செயற்றிட்டங்கள் எனப் பலவற்றை எடுத்துக்கூறியுள்ளார். எனினும் இச்செயற்றிட்டங்கள் முழுமைபெற்றுள்ளனவா என்பது குறித்து ஆராயவேண்டும். மேலும் இம்மாநாட்டில் இளைஞர்களின் பிரச்சினை பற்றி பேச இடமளிக்கப்படவில்லை. அத்துடன் எங்கள் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் ஊடக மாநாட்டை விரைவில் நடத்தவுள்ளோம். அதில் இளைஞர்களின் பிரச்சினை குறித்து ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் தேசிய துடுப்பாட்ட பிரச்சினை, 2011 ஆம் ஆண்டு கற்கை நெறிக்கான சான்றிதழ் வழங்கப்படவில்லை போன்ற விடயங்களைப் பற்றியும் அவர் இதில் சுட்டிக்காட்டினார். (93)

# காணாமற்போன அதிபர் சாரத்துடன் வீடு திரும்பினார்

(கொழும்பு)

காணாமற் போனதாக கூறப்பட்ட ராஜகிரிய பாடசாலை அதிபர் நேற்று முன்தினமிரவு வீடு திரும்பியுள்ளார்.

ராஜகிரிய ஹேவாவித்தாரண பாடசாலையின் அதிபர் நாகசிங்க சித்ரபால கடந்த ஏழு தினங்களாக காணாமற் போயிருந்தார்.

காற்சட்டை அணிந்து சென்ற பாடசாலை அதிபர் வீடு திரும்பிய போது சாரம் அணிந்திருந்தார்.

காணாமற போன நாட்களில் என்ன நடந்தது என்பது தமக்குத் தெரியாது என அதிபர் தெரிவித்துள்ளார்.

வீடு திரும்பியவுடன் பொலிஸ் நிலையத்திற்கு சென்ற அதிபர் பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் பாடசாலையின் கணனி ஆய்வுகூடம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவிருந்த நேரத்திற்கு சில மணித்தியாலங்கள் முன்னதாக அதிபர் காணாமல் போயிருந்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# சித்திரவதைகளுக்கு எதிரான சர்வதேச தினம் கொழும்பில்

(கொழும்பு)

சித்திரவதைகளுக்கு எதிரான சர்வதேச தினம் இன்று கொழும்பில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் நடைபெறும் இந்த வைபவத்தின் போது சித்திரவதைகளுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் மாலை 5.30 மணியளவில் நிகழ்வில் கலந்து கொள்ளும் அனைவரும் மெழுகுவர்த்தி ஏற்றி நிகழ்வை அனுஷ்டிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வை இலங்கை இதழியல் கல்லூரியின் பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். இலங்கையில் நடைபெறும் சித்திரவதைகளுக்கு எதிரான ஒரே நிகழ்வாக இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் ஏராளமான அரசியல்வாதிகள் மற்றும் கலைஞர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். காணாமற போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலி கொடவின் மனைவி சந்தியா பிரியங்கனி எக்னெலிகொட நிகழ்வின் சிறப்பு அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார்.

# சொல்ஹெய்ம் புலிகளுக்கு நிதியுதவி

# ஆதாரங்களை சமர்ப்பிக்க முடியும்

## ஜனாதிபதி தெரிவிப்பு




நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளுக்கு நிதி உதவிகளை வழங்கியமை தொடர்பான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாக, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். மாத்தளை சந்தியில் நடைபெற்ற வீதி அபிவிருத்தித்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளுக்கு பணம் வழங்கவில்லை என சொல்ஹெய்ம் மறுத்துள்ள போதிலும் பணம் வழங்கியமைக்கான ஆதாரங்கள் உள்ளன.

இது தொடர்பிலான புகைப்பட ஆதாரங்களையும் தேவையென்றால் சமர்ப்பிக்க முடியும். விடுதலைப் புலிகளுக்கு சொல்ஹெய்ம் பணம் வழங்கியமை உண்மையானது. தேவை ஏற்பட்டால் ஆதாரங்களை சமர்ப்பிக்க முடியும். எனினும், அந்த ஆதாரங்களை நான் சமர்ப்பிக்கப் போவதில்லை. போர் இடம்பெற்ற காலத்தில் புலிகளுக்கு ஆயுதங்களையும், பணத்தையும் வழங்கி நாட்டை பிளவடையச் செய்ய பலர் முயற்சித்தனர். அவ்வாறான முயற்சிகள் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன என அவர் தெரிவித்துள்ளார்.

# மைத்திரியின் செயற்பாடு சிறுபிள்ளைத்தனமானது

## அமைச்சர் தினேஸ் காட்டம்

(கொழும்பு)



எதிரணி பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன போட்டியிட எடுத்த தீர்மானமானது சிறுபிள்ளைத்தனமானதென நீர் விநியோக வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மத்துகம பிரதேசத்தில் நீர் விநியோகத்திட்டமொன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

வரவு செலவுத் திட்டம் மட்டுமல்லாது ஜனாதி பதித்தேர்தல், பொதுத் தேர்த்தல் போன்றவற்றிலும் ஆளும் கட்சி இலகுவாக வெற்றியீட்டும்.

அதிகார ஆசை கொண்ட அரசியல் வாதிகளுடன் இணைந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன எடுத்த தீர்மானம் சிறுபிள்ளைத்தனமானதெனவும் அவர் தெரிவித்தார்.

# வேகமாக குறைவடையும் வேலையற்றோர் வீதம்

தற்போது நாட்டில் வேலையற்றோர் வீதம் வெகுவாக குறைவடைந்து வருவதாகவும் இவ்வருட இறுதியில் 4.1 சதவீதமாக குறைவடைந்துள்ளது எனவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

2005 ஆம் ஆண்டில் 7.2 சதவீதமாக காணப்பட்ட வேலையற்றோர் வீதம் தற்போது 4.1 சதவீதமாக குறைவடைந்துள்ளது என அமைச்சு மேலும் தெரிவிதத்துள்ளது.

உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திகளின் வேகமும் புதிய புதிய வேலைச்சந்தர்ப்பங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றமையே இதற்கு காரணமாகும்.

தனியார் துறை அபிவிருத்திகளும் முதலீடுகளும் வேலையற்றோர் வீதம் குறைவடைந்து வருகின்றமைக்கு மிகப்பிரதான காரணமாகுமென அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# அரசியலில் தூய்மையானவர் மைத்திரிபாலசிறிசேன

## நற்சான்று அளிக்கும் ஹிருணிக்கா



மைத்திரிபால சிறிசேன அரசியலில் தூய்மையும் நேர்மையும் கொண்டவர் எனவும் இதனால் அவர் கட்சிக்கு திரும்பி வர மாட்டார் என்பதால், கட்சியில இருக்கும் நபர்களை பாதுகாக்க வேண்டும் எனவும் ஆளும் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

ராஜித சேனாரத்னவும் மைத்திரிபால சிறிசேனவும் தனது தந்தையின் மரணத்தின் போதும் மரணத்தின் பின்னரும் தனது தந்தைக்காக அச்சமின்றி குரல் கொடுத்தவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்படி ஒருவர், இருவர் என வெளியேறினால் அனைவரும் சென்று விட்டால் கட்சியில் ஹெரோயின்காரர்கள், எத்தனோல்காரர்கள், கொள்ளைக்காரர்கள், வியாபாரிகள் மாத்திரமே எஞ்சியிருப்பர்.


இப்படி அனைவரும் கட்சியை விட்டுச் சென்று விட்டால் உண்மையான நீல இரத்தம் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரை தேடிக்கொள்ளவும் முடியாது.

இது எமக்கு பாடத்தை கற்றுக் கொடுக்கும் காலம். சங்க, வைத்திய, குரு, விவசாயி, தொழிலாளர் என்ற பஞ்ச கொள்கைகள் சுதந்திரக் கட்சிக்கு இருந்தன.

தற்போது என்ன நேர்ந்துள்ளது. தூள், எத்தனோல், கொலை, ஊழல், மோசடி, கொமிஷன் போன்ற விடயங்களுடன் தொடர்புடைய புதியவர்கள் கட்சிக்குள் வந்துள்ளனர். இதன் காரணமாகவே எம்மிடம் இருந்த சிறந்த மனிதர்கள் எம்மை விட்டு செல்கின்றனர் எனவும் ஹிருணிக்கா பிரேமச்சந்திர குறிப்பிடடுள்ளார்.

# கட்சி தாவுவதென்ற தகவல் பொய்யானது

## பாலித ரங்கே பண்டார தெரிவிப்பு



நாம்கட்சி தாவவுள்ளதாக வெளியான தகவலகளில் உண்மையில்லை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

கட்சி தாவப் போவதாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாம் குறிப்பிட வில்லை என அவர சுட்டிக்காட்டியுள்ளார். ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளும் உத்தேசம் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக நியமிக்கப்பட்டமைக்கு பாலித ரங்கே பண்டார எதிர்ப்பை வெளியிட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் தாம் கட்சி தாவப் போவதில்லை என பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

# திருமண செலவிற்கு ஹெரோயின் விற்ற 2 பொறியியல் மாணவர்கள் கைது



திருமண செலவுக்கு பணம தேடும் வகையில் ஹெரோயின் போதை வஸ்தை விற்பனை செய்து கொண்டிருந்த பல்கலைக்கழகமொன்றில் பொறியியல் பாடநெறிகளை நிறைவு செய்துள்ள இரு இளைஞர்கள் மொனராகலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இளைஞர்கள் அணிந்திருந்த உடைகளின் பைகளில் ஹெரோயின் 215 மில்லிகிராம் எடையுள்ள ஆறு பக்கட்டுக்களும் ஐந்து மில்லி கிராம் எடையுள்ள ஐந்து பக்கட்டுக்களும் மீட்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த இளைஞர்களில் ஒருவர் மொனரா கலை பகுதியைச் சேர்ந்தவரென்றும் மற்றவர் கொழும்பு ராஜ கிரியைச் சேர்ந்தவரென்றும் தெரியவந்துள்ளது.

நாவல வெளிவாரி பல்கலைக்கழக பொறியியலாளர் பாடநெறிகளை நிறைவு செய்த இவ் இளைஞர்களில் கொழும் பைச் சேர்ந்த இளைஞனின் திருமண செலவுக்கு பணம் தேடும் வகையில் கொழும்பிலிருந்து ஹெரோயின் போதை வஸ்துகளைப் பெற்று மொனராகலை நண்பருடன் இணைந்து விற்பனை செய்து கொண்டிருந்த போதே இவ்விருவரும் கைது செய்யப்பட்டுள்ளன. இத்தகவல்கள் பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளின் போது தெரியவந்துள்ளன.

# பாப்பாண்டவரின் விஜயத்தை அரசியலாக்க வேண்டாம்

## திருச்சபை கோரிக்கை

பாப்பாண்டவரின் இலங்கை விஜயத்தை அரசியலாக்க வேண்டாம் என கத்தோலிக்க சபை மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது. பாப்பாண்டவர் முதலாம் பிரான்ஸிஸ் எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

பாப்பாண்டவரின் இலங்கை விஜயத்தை தேர்தல் பிரச்சார நோக்கங்களுக்காக அரசியல் கட்சிகள் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சில கத்தோலிக்க அரசியல்வாதிகள் இப்போதே பதாகைகள் மற்றும் பனர்களை அச்சிட்டு அரசியல் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாப்பாண்டவரின் உருவம் பொறித்த பதாகைகளை அரசியல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்துவது பொருத்தமானதல்ல எனவும் பாப்பாண்டவரின் இலங்கை விஜயத்தை பயன்படுத்தி அச்சிடப்பட்ட சுவரொட்டிகள், பனர்கள் மற்றும் பதாகைகள் அகற்றிக் கொள்ளப்பட வேண்டுமென கத்தோலிக்க பேராயர்கள் கோரியுள்ளனர்.

பாப்பாண்டவரின் இலங்கை விஜயத்திற்கு அண்மையிலோ விஜயத்தின் பின்னர் உடனடியாகவோ தேர்தல்களை நடத்த வேண்டாம் என அரசாங்கத்திடம் முன்னதாக கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததாக கத்தோலிக்கச் சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும் எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது.

# குளங்களில் நீர்மட்டம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போது பெய்து வரும் தொடர்மழையால் யாழ்.குடாநாட்டில் உள்ளூர் கிராமங்களில் உள்ள சிறு குளங்களின் நீர் மட்டம் உயர்ந்துவருவதுடன் சில குளங்களில் நீர் நிறைந்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது. கிராமப்புறங்களிலுள்ள குளங்களில் நீர் நிறைந்து காணப்படுவதால் கால்நடைகளுக்கு போதியளவு நீர் கிடைத்துள்ளது.

மேலும் சில குளங்கள் குப்பை கூழங்களால் நிறைந்து சுகாதார சீர்கேடாக காணப்படுவதுடன் இக்குளங்களில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கான வாய்ப்புகளும் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே குளங்களிலுள்ள குப்பைகளை அகற்றி துப்புரவு செய்வதன் மூலம் சுகாதார சீர்கேட்டை தடுக்க முடியும் எனவும் குளங்களில் குப்பைபோடுபவர்கள் அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி சிந்தித்து செயற்படவேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (140)

# நோயாளர்கள் மகிழ்ச்சி

வரணி பிரதேச வைத்திய சாலைக்கு அம்புலன்ஸ் வாகனம் வழங்கப்பட்டுள்ளதால் நோயாளர்கள் பெரும் நன்மையடைந்துள்ளனர். முன்னர் அம்புலன்ஸ் வாகனம் இல்லாததால் நோயாளர்கள், மற்றும் கர்ப்பிணிகள் பல்வேறு இடையூறுகளை எதிர்நோக்கி வந்தனர். இந்நிலையில் தற்போது அம்புலன் வாகனம் வழங்கப்பட்டதால் இரவு பகல் பாராது அவசர நோயாளர்கள் வைத்தியசாலைக்கு செல்லமுடிவதாகவும் இதனால் பணச் செலவு இல்லாமல் தாம் சிகிச்சையை பெற முடிவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (150)

# முரசின் இன்றைய பலன்



(25.11.2014 திங்கட்கிழமை)

ஐய வருஷம் கார்த்திகை மாதம் 09 ஆம் திகதி.
திருதியை / அமிர்த சித்தம்.
மூல நட்சத்திரம் பிற்பகல் 12.47 வரை. பின் பூராடம்.
இராகு காலம் 03.12 - 04.42 வரை. சுபநேரம் 10.42 - 12.12 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பேச்சுவார்த்தைகள் சுமுகமான முடிவினைத் தரும், நட்புக்கெடக்கூடிய சூழலை அதிகரிக்கும். |
| ரிஷபம் | வெளியூர் செல்லும்யோகம் கிட்டும், இறந்தவர்களின் நினைவாக தானதர்மம் செய்ய முற்படல். |
| மிதுனம் | பிரச்சினைகள் பற்றி விழிப்பாக இருத்தல் நன்று, கல்வியில் முழுக்கவனத்தையும் செலுத்தமுற்படல். |
| கடகம் | பெற்றோரின் நோய் காரணமாக பயணத்தைக்கைவிட்டுவிடல், ஆவணக்குறைபாட்டினால் போக்குவரத்தில் தண்டனை பெறல். |
| சிம்மம் | பணத்தைப்பெறமுடியாது முறையிடச் செல்லல், வெளியூர் பயணத்தைத்தற்காலிகமாகக் கைவிடல். |
| கன்னி | புதிய முயற்சியில் ஈடுபாடு ஏற்படல், பழையவாகனத்தை விற்றுப் புதியன கொள்வனவு செய்தல். |
| துலாம் | பரிசில், பாராட்டுப் பெறல், வாடகை மனை கைவிட்டுப் போகும் நிலைப்பாடு ஏற்படல். |
| விருச்சிகம் | தொழிலைக் கைவிட்டு வெளியூர் செல்லும் எண்ணம் மேலோங்குதல், பிரச்சினையை சுமுகமாக தீர்த்தல். |
| தனுசு | தேக நலப்பாதிப்பு ஏற்படும் என அஞ்சுதல், தொழிலில் விழிப்பாக இருத்தல் நன்று. |
| மகரம் | திறமைகளால் பாராட்டுக்கிடைத்தல், பொதுப்பிரச்சினைகளில் உங்களின் ஆலோசனைகள் ஏற்கப்படும். |
| கும்பம் | வாகனக்கொள்வனவு விடயத்தில் ஏமாற்றம், மாமனின் உறவில் சகஜநிலை ஏற்படும். |
| மீனம் | கூட்டுத்தொழிலில் கண்ணோட்டம் இருப்பது அவசியம். பணத்திற்கு திண்டாட்டம் ஏற்படும், சுவீப் அதிர்ஷ் முண்டு. |

# வாழ்வுக்கு வழிகாட்டியாக இருந்து

# முழு பங்களிப்பை வழங்குகிறார் அமைச்சர்

## போக்குவரத்து ஊழியர் சங்கத்தலைவர் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபையின் தேவைகளை இனங்கண்டு உரிய நேரத்தில் நிறைவு செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எமது வாழ்விற்கு வழிகாட்டியாக இருந்து வாழ்வின் மேம்பாட்டிற்காக முழுமையான பங்களிப்பை வழங்கி வருகிறார் என வட மாகாண ஜனநாயகப் போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் தலைவர் புவி தெரிவித்துள்ளார்.

கோண்டாவிலில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய யாழ்.சாலையில் இடம்பெற்ற சாரதிகள் மற்றும் காப்பாளர்களுக்கு நியமனப் பத்திரங்களை வழங்கி வ்வக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் திட்டங்களை வகுத்து எதிர்கால நல்நோக்கோடும் தீர்க்க சிந்தனையோடும் அவற்றைச் சிறப்பான முறையில் அமைச்சர் முன்னெடுத்து வருகிறார்.

வடபிராந்திய சாலைகளின் தேவைப்பாடுகள், பிரச்சினைகள் தொடர்பாக நாம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அணுகுகின்ற போது, எமது கோரிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளை அவ்வப்போது பெற்றுத் தருகின்றார்.



இதனடிப்படையில், புதிய பேருந்துகளைப் பெற்றுத் தந்த அதேவேளை, சாலைகளில் நிலவி வந்த ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் காணப்பட்டுள்ளன.

அந்த வகையில், எமது வாழவிற்கு வழிகாட்டியாக இருந்து வாழ்வை மேம்படுத்துவதற்கு சிறப்பான திட்டங்களை வகுத்து, அதனூடாக வாழ்வாதாரத்தை மட்டுமன்றி பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முழுமையான பங்களிப்பை வழங்கி வருகின்றார் என்றும் சுட்டிக் காட்டினார். இந்நிகழ்வில் சாரதி மற்றும் காப்பாளர்கள் 58 பேருக்கான நியமனப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வேம்பிராய் இந்து மயானத்தில் தகனக் கிரியை கொட்டகை இல்லை

## கவலை தெரிவிக்கும் மக்கள்

(சாவகச்சேரி)

வேம்பிராய் இந்து மயானத்தில் தகனக்கிரியை இடம்பெறும் இடத்தில் கொட்டகை இல்லாமையினால் தகனக் கிரியைகள் மேற்கொள்வதில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்போது மழைபெய்து வருவதால் இறந்தவர்களின் தகனக் கிரியைகள்ள மழை வெள்ளத்தில் மேற்கொள்ள முடியாது சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள் காணப்படும் இம்மயானத்திற்கு சாவகச்சேரி நகரசபையினரே கொட்டகை அமைக்க வேண்டிய நிலையிலும் அதைச் செய்யாது அசட்டையாக உள்ளனர்.

இத்தேவை குறித்து பலமுறை தெரிவித்தும் அதற்கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில் நேற்று முன்தினமும் தகனக் கிரியை மேற்கொள்ள முடியாது இறந்தவரின் உறவினர்கள் தவித்தனர். எனவே இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து கொட்டகை அமைக்க வேண்டும் என சாவகச்சேரி நகர சபையிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

# சிறந்த பாடசாலையாக தெரிவு

(கரணவாய்)

வலிகாமம் வலயத்தில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி சிறந்த பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்தினால் நடாத்தப்பட்ட வலய சாதனையாளர் விழா 2014 இற்கான சிறந்த பாடசாலை, சிறந்த அதிபர், சிறந்த ஆசிரியர் தெரிவுகள் வலய மட்டத்தின் தெரிவுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. இதில் குறித்த பாடசாலை சிறந்த பாடசாலையாக தெரிவானது. (18)





கெயார் நிறுவனத்துடன் இணைந்து திருமறைக்கலாமன்றம் நடாத்திய 'கலையால் பயன் செய்வோம்' என்னும் பயிற்சிப் பட்டறை கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போது... (48)

# பெண்கள் மீது திணிக்கப்படும் வன்முறைகள் ஒழிக்கப்படுமா,?

**பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு வாரம் இன்று முதல் எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்படுகிறது அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

பெண்களிற்கு எதிரான வன்முறைகள் என்பது அன்றுதொட்டு இன்று வரை ஒரு சர்வதேச பாரிய பிரச்சினையாக காணப்பட்டு வருகின்றது. சர்வதேச மட்டத்தில் இருந்து சாதாரண இல்லம் வரை பல்வேறு வடிவங்களில் இவைகள் தொடர்ச்சியாக பெண்களை வதைத்துக் கொண்டு இருக்கின்றது. எனினும் இது ஒரு பிரச்சினையாகவோ அல்லது ஒரு சாரார் மீது கட்டவிழ்த்துவிடப்படுகின்ற ஒரு பாரிய அநீதியாகவோ ஒட்டுமொத்த சர்வதேசம் கணக்கில் எடுப்பதில்லை. அவ்வப்போது பாரதூரமாக ஏதும் நிகழ்வுகள் நடைபெற்றால் கண்டனம் மற்றும்

## தவறிழைப்பவன் தலைநிமிர்ந்து நடக்க தண்டனையை ஏற்பது வெறுமனே பெண்களா?

கண்டன அறிக்கை வெளிவருவதிலும் வருடம் தோறும் வெறுமனே நிகழ்ச்சி நிரல் நிகழ்ச்சித் திட்டம் தயாரிப்புடன் களைந்துவிடுகின்றது. அதைவிட நமது நாடு முதல் சர்வதேசம் வரை அரசியல் பிரகடனங்களில் மாத்திரம் பெண்கள் உரிமைகள் மற்றும் பெண்களிற்கு எதிரான வன்முறைகளிற்கு குரல் கொடுத்தல் அவ்வப்போது ஒலிபெருக்கிகளையும் துண்டுப்பிரசுரங்களையும் அழகு படுத்திச் செல்கின்றன. எனவே இந்நிலையைப் பற்றி எல்லோரும் சிந்திக்கவேண்டிய தருணங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

சமத்துவம் சமஅந்தஸ்து, சம உரிமை என்றெல்லாம் வாய் கிழைக்க பேசிக்கொள்ளும் நாம் எல்லாம் ஏன் நம்முடன் வாழும் பெண்களை பெண் இனத்தை சமமாய் இருக்க அனுமதிப்பதில்லை. "பாதுகாப்பு" எனும் பெயரில் பெண்களை அடக்கி ஒடுக்கி நசுக்குகின்ற சமூகம் எல்லோரும் நம்பத்தகுந்தவர்களாகவும் நல்லவர்களாகவும் இருப்போமேயானால் ஏன் பெண்களிற்கு என்று விசேட பாதுகாப்பு தேவைப்படுகின்றது. இதை யாரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. தவறு இழைப்பவர்களை தட்டிக்கேளாமல் இன்னமும் பெண்கள் ஒழுக்கமானவர்களாக இருக்கின்றார்களா என உரசிப்பார்க்க துடிக்கின்றது எமது சமூகம். எனவே தவறிழைப்பவன் தலைநிமிர்ந்து நடக்க தண்டனைகள் வெறுமனே பெண்களிற்கா?

எத்தனையோ வகைகளில் காண்கின்றோம் வீட்டினுள் நடைபெறுகின்ற வன்முறைகள். நடுத்தர வர்க்கத்திற்குள் காணப்படுகின்ற குடும்பங்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்கள் பெரும்பாலும் பௌதீக வன்முறைகளினால் பெண்கள் வதைக்கப்படுகின்றார்கள். குறிப்பாக ஆண்களால் சொல்லிக்கொள்ளப்படும் குடும்பச்சுமை, கடன் போன்ற காரணங்கள் அதனால் குடிபோதை போன்ற காரணங்களால் ஆளாக்கப்படும் வீட்டில் பெண்கள் மேல் கட்டவிழ்த்து விடப்படுகின்ற வன்முறைகள் இன்று சர்வ சாதாரணமாகவிட்டது. சில இடங்களில் கணவன் மனைவியை அடிக்கலாம் என்பது ஏற்றுக்

கொள்ளப்படுகின்ற ஒன்றாகக் காணப்படுவது மிகவும் வேதனைக்குரிய தாகின்றது. இன்று யாழ். குடாநாட்டில் எத்தனை பெண்கள் இப்பிரச்சினையால் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாகி இருக்கின்றார்கள். கணவனின் கொடுமை தாங்க முடியாமல் விவாகரத்து எடுக்கும் அளவிற்கு பெண்கள் இன்று தள்ளப் பட்டுள்ளார்கள்.

மேலும் இன்றைய நாட்களில் எமது சூழலில் காணப்படுகின்ற ஏனைய வன்முறை நிகழ்வுகள் இளம் பெண்கள் மேல் கட்டவிழ்த்து விடப்படுகின்ற பாலியல் தொல்லைகள் வீதிகளில் செல்லும் போது அவர்கள்படும் துன்பங்கள், சனநெரிசலில் பேருந்துகளில் ஏனைய தனியார் போக்குவரத்து சாதனங்களில் பயணிக்கும் பெண்கள் படும் அவஸ்தைகள் அவமானங்கள் இவற்றை யாரும் தட்டிக்கேட்கும் நிலையில் இல்லை. ஏன் என்றால் தட்டிக்கேட்க முன்வருபவரையும் அடித்துநொருக்கும் அளவிற்கு இந்த வன்முறைக் கும்பல்களின் பின்னணியில் சில வலுவான அமைப்புகள் காணப்படுவதும் இவர்களின் அடாவடித்தனங்களை ஊக்குவிக்கின்றன.

இவற்றைவிட சமூகமட்டங்களில் சீதனம் என்பது பல ஏழைப் பெண்களை கன்னிகளாகவே வாழ்வைத் தொடர நிர்ப்பந்திக்கின்றது. இவற்றைவிட விதவைகள் என்ற பெயரில் எத்தனை பெண்களின் சுதந்திரங்கள் முடக்கப்பட்டுள்ளன. மேலும் எத்தனை இளவயதுப் பெண்கள் அவர்கள் விருப்பம் இன்றி கட்டாய திருமணங்களில் தள்ளிவிடப்படுகின்றார்கள். இவ்வாறான செயற்பாடுகளை யாரும் வன்முறைகள் என்றே எண்ணத் தோன்றாதது மிக கொடுமையாகும் மேலும் இக்கொடுமைகளை பல சந்தர்ப்பங்களில் பெண்களும் இணைந்தே பெண்களை வதைப்பது என்பதை எங்கு போய் யாரிடம் முறையிடுவது?

இவ்வாறு வன்முறைக் கலாசாரமும் சுரண்டல்களும், துஷ்பிரயோகங்களும் சூழ்ந்து காணப்படுகின்ற இவ் வையகத்தில் இவைகள் தொடர்வது ஆரோக்கிய மானதல்ல இவைகள் நிறுத்தப்பட்டு முடிவு காணப்படவேண்டும் என சிலசெயற்பாடுகள் ஆங்காங்கே சிறு கறல்களாய் தோற்றம் பெற்றுக் காணப்படுகின்றன. ஆனால் இந் நல்லெண்ணம் கொண்ட செயற்பாடுகளை யாரும் பெரிதாக போற்றி ஆதரவு வழங்குவதாக தெரிவதில்லை. என்றாலும் கூட தொடர்ந்தும் வன்முறை ஒழிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனூடாக கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டவண்ணம்

இருப்பது வரவேற்கத்தக்கதாக இருக்கின்றது.

இந்த வகையில் எமது அரசாங்கமும் பெண்கள் விவகாரத்துக்கு என்றே விசேட அமைச்சு ஒன்றை ஏற்படுத்தி மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டங்களில் இவற்றுக்கென பிரத்தியேக உத்தியோகத்தர்களை நியமித்து பல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. அரசசார்பற்ற அமைப்புகள் பல பெண்களுக்கான செயற்பாடுகளை தமது முதன்மைச் செயற்பாடுகளாகவும் திட்ட செயற்பாடுகளாகவும் மேற்கொண்டு கிராமம் தோறும், சமூகம் தோறும் விழிப்புணர்வு செயற்பாடுகளைப் கிராம அமைப்புகளையும் திறம்பட செயற்படுத்திக் கொண்டுவருதல் சமூக மட்டத்தில் சில சிந்தனை மாற்றங்களையும் வன்முறைக்கு எதிரான செற்பாடுகளையும் ஏற்படுத்தி வருகின்றது.


எமது அயல்நாடான இந்தியாவில் பல வலுவான பெண்கள் அமைப்புகள் தோற்றம் பெற்று கிராமம் முதல் அரசுவரை பல காத்திரமான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன.

அங்கு பல பெண்ணியவாதிகள் தமது வாழ்க்கையே பெண்கள் அபிவிருத்திக்காகவே அர்ப்பணித்து செயற்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. மறுதலையாக அந்நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எமது நாட்டுடன் ஒப்பிடுகையில் மிகமிக அதிகமாகவே காணப்படுகின்றன. பெண்ணிய சிந்தனையில் அதீத நம்பிக்கை கொண்ட பெண்கள் தமது சொந்த வாழ்க்கையை ஒரு பக்கம் தள்ளிவிட்டு மிகவும் வெளிப்படையாகவும் பகிரங்கமாகவும் பெண்களுக்கு எதிராக நடைபெறுகின்ற வன்முறைகளைத் தட்டிக் கேட்டும் அவற்றுக்கு எதிராக போராடியும் வருகின்றனர்.

அவர்களின் இத்தகைய அர்ப்பணிப்புகள் அங்கு பல பெண்களின் வாழ்க்கையில் ஒளியை ஏற்படுத்தி உள்ளது.

இவ்வாறே பார் எங்கும் பலவிதமான பெண்களிற்கான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பெண்களிற்கு எதிரான வன்முறை ஒழிப்பு நட வடிக்கைகளிற்காக உலகளாவிய ரதியில் பலதொடர் பிரசார (campaign) செயற்பாடுகளாக மக்களிற்கு விழிப்புணர்வு ஊட்டி வருகின்றன.

எனவே அந்த வகையில் பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு 16 நாள் தொடர்பான உலகளாவிய ரீதியில் மிகப் பிரபல்யம் பெற்ற ஒரு செயற் பாடாக காணப்படுகின்றது. இது ஒரு சர்வதேச செயற்பாடாகும். இது 1991 ஆம் ஆண்டு உலக பெண்கள் தலை மைத்துவ அமைப்பினால் (Womans Global Leadership Institute) இந் நிகழ்வுக்காய் வருடம் தோறும் கார்த்திகை 25 முதல் மார்கழி 10 ஆம் திகதி வரை அங்கிருந்த பங்குபற்றுனர்கள் ஒன்றிணைந்து தீர்மானம் எடுத்தனர்.



அன்றிலிருந்து இன்று வரை வருடம் தோறும் இப் 16 நாட்களும் பல்வேறு வகையான வன்முறை ஒழிப்பு விழிப்புணர்வு செயற்பாடுகள் சர்வதேச ரீதியாக நடைபெற்று வருகின்றன. அந்தவகையில் 164 நாடுகளில் 3700 இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் 1991 ஆம் ஆண்டு முதல், பல்வேறு செயலகங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தினங்கள் தெரிவு செய்யப்பட்டமைக்கு விசேட காரணங்கள் உண்டு. ஏனெனில், கார்த்திகை 25 என்பது பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிரான சர்வதேச தினமாக பிரகடனப்படுத்தப் பட்டு இருந்தது.

அத்துடன் மார்கழி 10 என்பது சர்வதேச மனித உரிமைகள் தினம் ஆகும். எனவே பெண்களுக்கு எதிரான வன்முறைகள் என்பது ஒரு மனித உரிமை மீறல் செயற்பாடாகும். எனவே இதனை நிறுத்தாவிடில் மனித உரிமைகள் தினத்தினை நினைவு கூருவதில் பயனில்லை என்பதனை காட்டுவதாக இத்தினங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இக்காலப்பகுதிக்கான நிகழ்வுகளில் பின்வருகின்ற விடயங்களில் கவனம் செலுத்தும் முகமாக நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

- பால் நிலை ரீதியான அனைத்து வன்முறைகளும் ஒரு மனித உரிமை மீறல் செயற்பாடாகும் எனும் விழிப்புணர்வை உள்ளூர், தேசம், பிராந்தியம் மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்படுத்துதல்.
- உள்ளூர் மட்டங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்ற செயற்பாட்டாளர்களை வலுவூட்டல்.
- பெண்களிற்கு எதிரான வன்முறை ஒழிப்பு செயற்பாடுகளில் உள்ளூர் மட்டங்களுக்கும் சர்வதேச மட்டங்களுக்கும் இடையில் ஒரு தொடர்பில் ஏற்படுத்துதல்.
- சர்வதேச ரீதியில் இச்செயற்பாட்டில் ஈடுபடும் பெண்களுக்கு இடையில் ஒரு வலிமையான பிணைப்பினை ஏற்படுத்துதல்.
- அரசாங்கங்களின் மேல் அழுத்தங்களைக் கொடுத்து அர சாங்கம் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு செயற்பாட்டிற்காக முன்வைத்துள்ள செயற்பாடுகளை செயற்படுத்துவதற்கு ஒரு சாதனமாக பயன்படுத்தல் என்பனவாகும்.


அந்த வகையில் யாழ்.மாவட்டத்திலும் கடந்த பல வருடங்களாக மாவட்ட செயலகமும் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களும் இணைந்து பல செயற்பாடுகளை இக்காலத்தில் முன்னெடுத்து வருகின்றன. அந்த வகையில் யாழ்ப்பாணத்தை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் யாழ். சமூக செயற்பாட்டு மையம், இந்நிகழ்வினை ஒட்டி மாகாண ரீதியான ஒரு செயற்பாட்டினை மேற்கொள்ள திட்டம் இட்டிருக்கின்றது.

இன்று எமது பிரதேசத்தில் பெண்களுக்கு எதிரான பலவிதமான வன்முறைகள் தொடர்ந்தாலும் பல்வேறு வகைகளில் பெண்களை தெந்தரவு செய்தல், பெண்களின் மேலான வன்முறைகளுக்கு அச்சுறுத்தல் எனப் பல விடயங்கள் சகல பெண்களையும், இன்று துயருக்குள்ளாகின்றன.

அந்த வகையில் அனைத்து பெண்களின் சுதந்திரமான மற்றும் பாதுகாப்பான நடமாட்டத்திற்கான ஒரு பாதுகாப்பான சூழலை கட்டி எழுப்புவோம் என்ற தொனிப்பொருளில் பல்வேறு மட்டத்தினருடனும் கலந்துரையாடல் மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ள இருக்கின்றது.

எனவே இந்நேரத்தில் இச் சிறு முயற்சி வெற்றி பெற்று பெண்களின் வாழ்விற்கு ஒரு சாதகமான சூழலை ஏற்படுத்த அனைத்து தரப்பினரிடமும் ஒத்துழைப்பினை வேண்டி நிற்கின்றோம்.

ந.சுகிர்தராஜ்
இணைப்பாளர்,
யாழ்.சமூக செயற்பாட்டு மையம் (JSAC)




மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட நவிண்டில் கலைமதி அணி விருந்தினர்களுடன் நிற்பதைக் காணலாம்.

# விளையாட்டு செய்திகள்

## விரைவில் 2ஆவது சுற்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்படும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டங்கள் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்களில் யாழ். மத்திய கல்லூரி மற்றும் சென். ஜோண்ஸ் கல்லூரி அணிகள் வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சூப்பர் குறூப் சுற்றுப் போட்டியாக நடாத்தப்பட் இத் தொடரில் தெரிவு செய்யப்பட்ட அணிகள் மட்டுமே பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வென்றது சுழிபுரம் விக்ரோறியா

(யாழ்ப்பாணம்)

முதல் இனிங்ஸில் முன்னிலை பெற்ற சுழிபுரம் விக்ரோறிய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் சுழிபுரம் விக்ரோறிய கல்லூரி மற்றும் யாழ். இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஆட்டம் கடந்த வாரம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய விக்ரோறிய கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சியாமளன் 22 ஓட்டங்களைப் பெற்றார். உதிரிகளாக 32 ஓட்டங்களால் யாழ். இந்துக் கல்லூரி அணியால் விட்டுக்கொடுக்கப்பட்டது. பந்து வீச்சில்அங்கவன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 71 ஓட்டங்கள் பெற்றது. இதில் சாரங்கன் 10 ஓட்டங்களைப் பெற்றார். உதிரிகளாக 21 ஓட்டங்களை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி விட்டுக்கொடுத்தது. பந்து வீச்சில் புவிதரன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

34 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடி விக்டோரியா அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. இதில் புவிதரன் 17 ஓட்டங்களைப் பெற்றார். உதிரிகளாக 34 ஓட்டங்களை யாழ். இந்துக் கல்லூரி அணி விட்டுக்கொடுத்தது. பந்து வீச்சில் ஹரிகரன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

95 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கியது யாழ். இந்துக் கல்லூரி அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் போட்டி நிறைவுக்கு வந்தது. துடுப்பாட்டத்தில் எந்தவொரு வீரரும் இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்ளவில்லை. பந்து வீச்சில் சியாமளன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற் றினார். போட்டி விதியின் படி முதல் இனிங்ஸ ில் முன்னிலை பெற்ற சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (93)

## மூன்றாமிடம் குருநகர் பாடுமீன்




(யாழ்ப்பாணம்)

மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் மூன்றாமிடத்தை குருநகர் பாடுமீன் அணி பிடித்துக் கொண்டது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுப் பிரிவு மாவட்ட ரீதியில் நடாத்திய மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் மூன்றாமிடத்திற்கான போட்டி நேற்று முன்தினம் நண்பகல் 12.00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில் குருநகர் பாடுமீன் அணியும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் மோதின. முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சமபலம் கொண்டவையாகச் செயற்பட்டதனால் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

பிற்பாதி ஆட்டத்தில் மிகவேகமாகச் செயற்பட்ட பாடுமீன் அணி அதிரடியான முறையில் கோல் ஒன்றைப் போட்டு முன்னிலை பெற்றிருந்தது. இதற்குப் பதில் கோல் போடும் முனைப்புடன் நவஜீவன்ஸ் அணி செயற்பட்டபோதும் அதன் முயற்சிகள் பாடுமீன் பிற்கள வீரர்களால் முறியடிக்கப்பட்டன. நிறைவில் பாடுமீன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (எஸ்.பி,93)

## நாளை ஒரு நாள் ஆட்டம்

(கொழும்பு)

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் போட்டி நாளை கொழும்பு பிரேமதாஸ விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

அண்மையில் இந்திய அணியுடனான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் படுதோல்வியைத் தழுவிக் கொண்ட இலங்கை அணி இத்தொடரை வெல்ல வேண் டிய நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது.

இருப்பினும் சொந்த மண்ணில் இப்போட்டி நடைபெறவுள்ளமையால் இலங்கை அணிக்குச் சாதகமாக அமையும் என கிரிக்கெட் வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். குறிப்பாக, இங்கிலாந்து அணியைப் பொறுத்து இலங்கை போன்ற ஆசிய ஆடுகளில் சாதிப்பது அரிது என்பதால் இலங்கை அணிக்கு அது சாதகமாக அமையும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## இறுதி டெஸ்ட் ஆட்டம் சார்ஜாவில் நாளை

நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும், இறுதியுமான ஆட்டம் நாளை சார்ஜாவில் நடைபெறவுள்ளது.

தொடரில் 1-0 என்ற கணக்கில் பாகிஸ்தான்அணிமுன்னிலைபெற் றுள் ளதால் இப்போட்டியை சமநிலை செய்தாலே தொடரைக் கைப்பற்றிக்கொள்ளும். தொடரை சமப்படுத்த வேண்டுமாயின் நியூசிலாந்து அணி கட்டாய வெற்றியை பெறவேண்டிய நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொடரும் மன்னார் பொலிஸ் அணியின் வெற்றி நடை

(மன்னார்)

பொலிஸ் திணைக்களத்தினால் நடாத்தப்படும் 79ஆவது பொலிஸ் கால் பந்தாட்டத் தொடரில் மன்னார் பொலிஸ் அணி அதிக வெற்றிகளைப் பதிவு செய்து முதன்மைச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடரின் ஆட்டமொன்று கடந்த 20 ஆம் திகதி மன்னார் தாழ்வுபாடு ஆயர் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் மன்னார் பொலிஸ் அணியும் பொலநறுவை பொலிஸ் அணியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முற்பாதி ஆட்டத்தின் ஆறாவது நிமிடத்தில் பொலநறுவை பொலிஸ் அணி முதலாவது கோலைப் போட்டு முன்னிலை பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் செயற்பட்ட மன்னார் பொலிஸ் அணிக்கு



முற்பாதி ஆட்டம் நிறைவடைய ஐந்து நிமிடங்கள் இருக்கையில் கோல் அடித்து போட்டியைச் சமன் செய்தது. இந்நிலையில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்தில் கனமழை பெய்தமையால் போட்டியை தொடர்ந்தும் நடாத்த முடியாத நிலை ஏற்பட்டதுடன் இரு அணிகளுக்கும் சம புள்ளிகள் வழங்கப்பட்டன. இந்நிலையில் ஐந்து போட்டிகளில் பங்கு கொண்ட மன்னார் அணி ஒரு போட்டியிலும் தோல்வியுறாத அணியாகத் திகழ்வதுடன் வடமாகாண அணிகளில் அதிக புள்ளிகளைப் பெற்ற அணியாகவும் விளங்குகின்றது.

இதன் காரணமாக கொழும்பில் நடைபெறவுள்ள முதன்மைச் சுற்றுக்கு மன்னார் பொலிஸ் அணி தகுதி பெற்றுள்ளது.

# தார்மீக வலுவிழந்த தமிழ் அரசியல் சூழல்

- தோழர் சுகு- ஸ்ரீதரன் -




தமிழ் சமூகத்தின் தேசிய விடுதலையுடன், இலங்கையில் சமூக பொருளாதார விடுதலையையும், ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்களாக இருக்கக்கூடிய சர்வ தேச சமூகத்தின் நட்புறவுக்காகவும் வாழ்ந்து தமிழ் சமூகத்தினுள் வேரூன்றிவிட்ட பாசிசத்தின் படு கொலை தாக்குதலில் பன்னிரு தோழர்களுடன் பலியாகியவர் தோழர் பத்மநாபா.

ஆளுமைமிக்க தோற்றமும், தீட்சண்யமான பார்வையும் மலையென சவால்கள் எழுந்தாலும் "நோ புரொப்ளம்" என்று சொல்லி வாழ்ந்து மடிந்தவர் தோழர் பத்மநாபா. அவர் ஒன்றரை தசாப்தங்களாக மக்களின் விடிவுக்காக உழைத்து தனது 39 வயதில் மரணம் என்னும் சவாலை எதிர் கொண்டார்.

தமிழ் சமூகத்தின் உன்னத மான தலைவர்களெல்லாம், மக்களை நேசித்த மனிதர்க ளெல்லாம் இவ்வாறுதான் படுகொலை செய்யப்பட்டிருக் கிறார்கள்.

மகா புருஷன் எனப்படுபவன் ஏனையோரை விட தீர்க்கதரிசனம் மிக்கவன் என்றார் ரஷ்ய தத்துவஞானி பிளக்காநோவ். இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன் வடக்கு கிழக்கு வாழ் மக்களுக்கு ஒரு நியாயபூர்வமான தீர்வை உருவாக்குவதில் அவர் தீர்க்க மான பங்களிப்பை வழங்கியிருந்தார்.

அவருடைய அரசியல் தூ ரதிருஷ்டி- ஒரு பேரழிவில் இருந்து சமூகத்தை காப்பாற்றும் அக்கறையைக் கொண்டிருந்தது. இலங்கையில் நடக்கும் சமூக மாற்றத்தில் மலையக மக்களின் பங்கை அவர் எப்போதும் வலியுறுத்தி வந்தார். சமூகத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவினரான சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள், வர்க்க ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள், தேசிய ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள், ஒடுக்குமுறைக்குள்ளான பெண்கள் அத்தனை சமூக பிரிவினர் மீதும் அதீத ஈடுபாட்டை காட்டினார். தோழமை என்றால் என்ன என்பதற்கு அவர் ஒரு வாழும் உதாரணமாக திகழ்ந்தார். அவருடைய இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட மக்களே அவர் எத்தகைய மானிடர் என்பதற்கு சான்று பகன்றது.

அவர் மிகவும் அழகான கனவை கொண்டிருந்தார். அது மனித குலத்தின் மகிழ்ச்சியான வாழ்வு என்பது மாத்திரம்தான். அதற்காக அவர் முழுமையாக தன்னை அர்ப் பணித்திருந்தார்.

நாபாவும் மறைந்த தோழர்களும், கண்ட கனவுகளுக்கும் இன்றைய யதார்த்தத்திற்குமிடையில் நெஞ்சு பொறுக்கமுடியாத இடைவெளி காணப்படுகிறது.

இன்று தமிழ் அரசியல் சூழல் என்பது அயோக்கியர்களின் கூடார மாக மாறியிருக்கிறது என்பதை மிகுந்த தன்னடக்கத்துடன் உரைக்க வேண்டியிருக்கிறது.

நேர்மையானவர்கள், உண்மையான வர்கள் எள்ளி நகையாடப்படுவதான சூழல் உருவாகியிருக்கிறது

முற்போக்கான மக்கள் சார்ந்த அரசியல் பாரம்பரியம் உருவாகுவதற்கு நீண்டகாலம் எடுக்கலாம்.

தார்மீக உணர்ச்சி சிறிதும் இல்லாமல் கிடைப்பதைச் சுருட்டிக் கொள்வது, சூறையாடல், மக்களை ஏமாற்றுதல் என்ற போக்கு அதிகரித்திருக்கிறது.

போராட்டத்தில் உயிரை இழக்கச் சித்தமாக இருந்தவர்களும் இவர்களும் ஒரே மக்கள் பிரிவினர் அல்ல.

தமிழர்களின் போராட்டத்தின் பாசிச கூறுகளும் எதிரெதிர் இனவாதப் போக்கும் சமூகத்தை சிதைத்து சின்னாபின்னமாக்கியுள்ளன.

உன்னதமான முற்போக்கான பரந்த எண்ணங்கொண்ட தலைமைத்துவ மரபு ஒன்று தலை முறிக்கப்பட்டுள்ளது

அது தளிர் விட வேண்டும்.

ஒரு புதிய தலைமுறைப் பிரகாசமான தலைவரின் பேரிழப்பு. ஈடுசெய்யமுடியாத வெற்றிடம் அது. ஹிட்லரின் நாசிசம் ஜேர்மனியினதும் ஐரோப்பாவினதும் மாபெரும் தலைவர்களை எவ்வாறு காவு கொண்டதோ அவ்வாறுதான தமிழ் பாசிசமும் தோழர் நாபாவை காவு கொண்டது. அவர் சேகுவேரா, கொங்கோவின் விடுதலை வீரர் லுமும்பா, மண்டெலா போன்ற தலைவர்களின் வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டியவர்.

வரலாறு இம் மகத்தான மனிதனை என்றோ ஒரு நாள் முன்னிறுத்தும். தற்போதைய சமூக முன்னேற்றத்துக்கு எதிரான சக்திகள் அன்று வரலாற்றின் குப்பைத் தொட்டியில் இருப்பார்கள்.

நவம்பர் 19 தோழர் நாபாவின் 63 வது பிறந்த நாள்.

# கே.வி. மகாதேவன்



34

- பி.ஜி.எஸ்.மணியன் -

நடிகர் திலகத்துக்காக "இருவர் உள்ளம்" பாடல்களைக் கொடுத்தவர் மக்கள் திலகத்துக்காக கொடுத்ததுதான் "பரிசு". டி. யோகானந்த்தின் இயக்கத்தில் வெளிவந்த இந்தப் படத்தில் எம்.ஜி.ஆர். சாவித்திரி நடித்தனர். முதல் முதலாக ஒரு சமூகப் படத்தில் எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக நடித்தார் சாவித்திரி. ஏற்கெனவே எம்.ஜி.ஆருடன் அவர் நடித்த "மகாதேவி" ஒரு சரித்திரப் படம்.

"பட்டுவண்ணச் சிட்டு" - டி.எம்.எஸ்.

"எண்ண எண்ண இனிக்குது" - டி.எம்.எஸ்- பி.சுசீலா.

"கூந்தல் கறுப்பு குங்குமம் சிவப்பு" டி.எம்.எஸ். - பி. சுசீலா.

"காலமென்னும் நதியினிலே" - பி.சுசீலா.

"பொன்னுலகம் நோக்கிப் போகின்றோம்" - பி. சுசீலா.

என்று பரிசு படப்பாடல்கள் எல்லாமே இசை விருந்தாக அமைந்தன.

படமும் வெற்றி பெற்றது.

தர்மம் தலை காக்கும் படத்துக்குப் பிறகு எம்.ஜி.ஆரை வைத்து தனது அடுத்த படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டார் சின்னப்பா தேவர். ஒரு "கௌபாய்" பாணிக் கதையை தயார் செய்து ஆரூர்தாஸை திரைக்கதை வசனம் எழுத வைத்து எம்.ஜி.ஆரிடம் கொண்டு சென்றார்.

"முருகா. நம்ம அடுத்த படம் இந்த இங்கிலீ'லே "கௌபாய்" என்று சொல்லறாங்களே அந்த டைப் படம்." என்று தேவர் ஆரம்பித்ததுமே எம்.ஜி.ஆர். குறுக்கிட்டார்.

"அது இருக்கட்டும் அண்ணே. படத்துக்கு இசை யாரு?"

தேவரின் புருவங்கள் விரிந்தன.

"என்ன முருகா இப்படிக் கேக்குறீங்க. வழக்கம் போல நம்ம "மாமா" தான்.- என்று தேவர் முடிப்பதற்குள் குறுக்கிட்டார் எம்.ஜி.ஆர்.

"அதைத்தான் நான் சொல்லவந்தேன். இந்தப் படத்துக்கு "மாமா" இசை அமைக்கவேண்டாம். மாமாவோட திறமை யாருக்குமே வராதுதான். இருந்தாலும் இந்தத் தடவை புதுசா வேற யாரையாவது போடலாமே...' விஸ்வநாதன் - ராமமூர்த்திக்கு இந்தப் படத்திலே வாய்ப்பு கொடுக்கலாமே" என்றார் எம்.ஜி.ஆர்.

"அதுவும் சரிதான்" என்று ஒப்புக்கொண்ட தேவர் தன் வழக்கப்படி மடி நிறைய பணத்தை எடுத்துக் கட்டிக்கொண்டு கிளம்பினார்.

எம்.எஸ். விஸ்வநாதனின் வீடு.

தன்னைத் தேடி வந்த சின்னப்பா தேவரை மலர்ச்சியுடன் வரவேற்றார் விஸ்வநாதன்.

"முருகா. என்னோட அடுத்த படம் "வேட்டைக்காரன்". எம்.ஜி.ஆர். ஹீரோ. இந்தப் படத்துக்கு நீங்கதான் இசையமைச்சுக் கொடுக்கணும். இந்தாங்க பணம். பத்தலைன்னா சொல்லுங்க. எவ்வளவு வேணுமோ வாங்கிக்குங்க" - என்று மடியிலிருந்து பணத்தை அப்படியே முன்னாலிருந்த மேஜை மீது கொட்டினார் தேவர்.

திகைத்துப்போன எம்.எஸ்.வி. தனது சம்மதத்தைச் சொல்ல வாயெடுத்த வேளையில் அருகில் அமர்ந்துகொண்டு நடப்பதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த விஸ்வநாதனின் தாயார் சின்னப்பா தேவர் பார்த்துக்கொண்டிருக்கும் போதே "பளார்" என்று மகனின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டார்.

"நன்றி கெட்டவனே. பழசை மறந்துட்டியா? ஒரு காலத்துலே உடுத்தின துணிக்கு மாத்துத் துணிகூட இல்லாம சேலத்துக்கு போனப்போ ஒரு தகப்பனைப் போல உனக்கு அன்பு காட்டி செலவுக்கு பணமும் போட்டுக்க சட்டையும் கொடுத்து உதவின அந்த புண்ணியவான் வேலை செய்யுற




இடத்துலே நீ அடி எடுத்துவைக்க நினைக்கலாமா?" என்று மகனைப் பார்த்து ஆவேசத்துடன் கூறியவர் அந்த வேகத்துடனேயே தேவரின் பக்கம் திரும்பி, "அய்யா. தப்பா நெனைக்காதீங்க. நீங்க எத்தனை லட்சத்தை கொட்டிக் கொடுத்தாலும் என் மகன் உங்களுக்கு பாட்டுப் போட்டுக் கொடுக்க மாட்டான். உங்க வழக்கம் போல அய்யரை வச்சே பாட்டுப் போட்டுக்குங்க. அதுதான் நல்லது." என்று அழுத்தம் திருத்தமாகக் கூறி அவரை திருப்பி அனுப்பி வைத்தார் எம்.எஸ்.வி.யின் தாயார்.

அன்னையின் ஆணைக்கு அடிபணிந்த மகன் என்பதால் மெல்லிசை மன்னர் அந்தப் படத்துக்கு மட்டும் என்று அல்ல - தேவர் பிலிம்ஸ் தயாரித்த எந்தப் படத்துக்கும் இசை அமைக்கவே இல்லை என்பது வியக்க வைக்கும் தகவல்.

நேராக எம்.ஜி.ஆரிடம் வந்து நடந்ததைச் சொன்னார் தேவர்.

"சரி சரி. மாமாவே இசை அமைக்கட்டும்." என்று சொல்லிவிட்டார் எம்.ஜி.ஆர்.

"வேட்டைக்காரன்" - எம்.ஜி.ஆர். ரசிகர்களால் இன்றளவும் மறக்கமுடியாத படம்.

மக்கள் திலகத்துடன் நடிகையர் திலகம் இணைந்த மூன்றாவது படம். இதற்குப் பிறகு அவர் எம்.ஜி.ஆருடன் சேர்ந்து நடிக்கவே இல்லை. இந்தப் படத்துக்காக கே.வி.மகாதேவன் அமைத்த பாடல்கள் எம்.ஜி.ஆரைப் புகழேணியின் உச்சத்துக்கே கொண்டு சென்றன.

"உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம்" - பாடல் ஒன்றே போதுமே. இன்றளவும் இந்தப் பாடலுக்கு உள்ள மவுசு குறைவதே இல்லையே!

காட்சி அமைப்புப்படி பார்த்தால் இந்தப் பாடல் ஒரு ஈவ்-டீசிங் காட்சிக்கான பாடல். ஆனால் அதிலும் கூட நல்ல கருத்துக்களைப் புகுத்தி இருப்பது மக்கள் திலகத்தின் தனி ஸ்டைல்தான்.

மறக்கவே முடியாத சரண வரிகள்.

"பூமியில் நேராக வாழ்பவர் எல்லாரும் சாமிக்கு நிகரில்லையா.

பிறர் தேவை அறிந்துகொண்டு வாரிக் கொடுப்பவர்கள் தெய்வத்தின் பிள்ளை இல்லையா"

"மாபெரும் சபைதன்னில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழவேண்டும்.

ஒரு மாற்றுக்குறையாத மன்னவன் இவன் என்று போற்றிப் புகழவேண்டும்"

பாடலில் சொல்லப்பட்ட கருத்துக்கள் மக்கள் மனதில் ஆணித்தரமாகப் பதியும் வண்ணம் மெட்டமைத்திருக்கிறார் கே.வி.மகாதேவன்.

"மஞ்சள் முகமே வருக" - டி.எம்.எஸ். - சுசீலா டூயட்.

"மெதுவா மெதுவா தொடலாமா" - டி.எம்.எஸ். - சுசீலா பாடும் இந்தப் பாடலின் இணைப்பிசையில் தான் என்ன விறுவிறுப்பு!

"கண்ணனுக்கெத்தனை கோவிலோ" - பி.சுசீலா. சரண வரிகள் முதலில் விருத்தமாகவும் அதன் பிறகு பாடலாகவும் விரிகின்றன.

"கதாநாயகன் கதை சொன்னான்" - என்று மற்றொரு டூயட்.

"சீட்டுக்கட்டு ராஜா" - பாடலை நகைச்சுவை ஜோடி நாகேஷ் - மனோரமாவுக்காக ஏ.எல். ராகவன் - எல்.ஆர். ஈஸ்வரியைப் பாட வைத்தார்.

"வெள்ளிநிலா முற்றத்திலே" - டி.எம்.எஸ். தனித்துப்பாடும் மெலடி.

இசை வேட்டைதான் ஆடியிருக்கிறார் கே.வி. மகாதேவன்.

(தொடரும்).

# இந்தியாவின் 8 வாகனங்களால் வடக்கு மாகாணசபையில் அடிபாடு...



இலங்கையின் வடக்கு மாகாண சபைக்கு உறுப்பினர்களின் பாவனைக்கென எட்டு வாகனங்களை வழங்க இந்தியா முன்வந்திருப்பதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. ஆயினும், இந்த நடவடிக்கை மாகாண-சபை உறுப்பினர்களிடையே குழப்ப நிலையை உருவாக்கும் என்றும், அவ்வாறு வழங்குவதாக இருந்தால் எல்லா உறுப்பினர்களுக்கும் வாகனங்கள் வழங்க வேண்டும் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

அதேநேரம், எட்டு வாகனங்கள் மட்டுமே வழங்கப்படுமானால், அவற்றை உறுப்பினர்கள் யாரும் பெற்றுக் கொள்ளக் கூடாது என்று வலியுறுத்தி சபை உறுப்பினர்களுக்கு மொட்டைக் கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

வடமாகாணசபை உறுப்பினர்கள் தேர்தலில் வெற்றிபெற்று, பதவிப் பிரமாணம் செய்து கொண்டபோது, சபையின் 38 உறுப்பினர்களுக்கும் இந்தியா வரி விலக்களிக்கப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்து வழங்க முன்வந்திருந்ததாகவும், எனினும் இலங்கையின் நிதியமைச்சு அதற்கு ஒப்புதலளிக்க மறுத்துவிட்டது என்றும் மாகாணசபையைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

அவ்வாறு வரி விலக்களிக்கப்பட்ட நிலையில், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கு வாகனங்களை வழங்கினால் நாட்டில் உள்ள ஏனைய எட்டு மாகாண-சபை உறுப்பினர்களுக்கும் அந்தச் சலு-கையை வழங்க வேண்டியிருக்கும், எனவே அதனை செய்ய முடியாது என்று நிதியமைச்சு காரணம் கூறியிருந்ததாகவும், அதனையடுத்தே, எட்டு வாகனங்களை மட்டும் வழங்க இந்தியா முன்வந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இது குறித்து, வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், “8 வாகனங்களை - அதுவும் சமூகத்திற்கு கூடிய அளவில் சேவை செய்பவர்களுக்கு வழங்குவதாகக் கூறப்பட்டிருப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல” என கூறினார்.

இப்படி 8 பேருக்கு மட்டும் வாகனங்களை வழங்குவது என்பது உறுப்பினர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் என்றும், எனவே வாகனங்கள் வழங்கினால் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்றும் சிவஞானம் தெரிவித்தார்.

அமைச்சர்களுக்கும் அவைத் தலைவர் மற்றும் துணை அவைத்தலைவர் ஆகியோருக்கும் அரசு வாகனங்களை வழங்கியிருப்பதாகத் தெரிவித்த அவர், இரண்டரை ஆண்டுகளின் பின்னர் வரிவிலக்களிக்கப்பட்ட வாகனங்களைப் பெறுகின்ற உரிமை, இந்திய வாகனங்களைப் பெற்றுக் கொண்டால், உறுப்பினர்களுக்கு இல்லாமல் போய்விடுமோ என்ற பிரச்சினையும் இருக்கின்றது என குறிப்பிட்டார்.


சொகுசு வாகனங்களுக்காக முட்டிமோதும் பொதுநல சேவகர்கள்!! மக்காள், இன்னுமா இவர்களை நம்புகிறீர்கள். அடுத்த தடவையும் தவறாமல் உங்கள் பொன்னான வாக்குகளை இவர்களுக்கே போட்டு விடுங்கள்.

# தொண்டா, வெறும் பகட்டா!

நியுயோர்க் நகரத்தைப் பெரும்புயல் தாக்கிய பின் செஞ்சிலுவைச் சங்கம் என்ன மாதிரி தொண்டாற்றியது என்பது குறித்த வெள்ளை அறிக்கை வெளிவந்திருக்கிறது. அந்த அறிக்கையின் படி, புயலினால் வீடிழந்தவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவுவதை விட தன்னுடைய மக்கள் தொடர்பை மேலும் விளம்பரப்படுத்திக் கொள்ளவே செஞ்சிலுவைச் சங்கம் முயன்றதாக, அவர்களுடைய ஊழியர்களே தெரிவித்திருக்கிறார்கள்.

உடல்நிலை சரியில்லாதவர்களுக்காகச் செலுத்த வேண்டிய முதலுதவி வண்டிகளை, மருத்துவ வசதிக்காகப் பயன்படுத்தாமல், தொலைக்காட்சிப் பேட்டிகளுக்கு பின்னணியாக மட்டுமே பயன்படுத்தி இருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களின் புகைப்படத்தைத் தொலைக்காட்சியில் காண்பித்து கோடி கோடியாக நன்கொடையைப் பெற்றாலும், அவற்றை அரசியல் ஆதாயங்களுக்காகவும், பதவியில் இருப்போர் பணித்ததின் படி உபயோகிக்கவும் செஞ்சிலுவைச் சங்கம் சுணங்கவேயில்லை. விநியோகிக்க எவருமே இல்லை என்பதை அறிந்திருந்தும் ஒரு நாளைக்கு இரண்டு லட்சம் சாப்பாடுகளை தருவித்து இருக்கின்றனர் அவற்றை அப்படியே குப்பையில் போட்டு இருக்கின்றனர்.

ஹரிகேன் சான்டி (Superstorm Sandy) மட்டுமல்ல... லூயிசியானாவிலும், மிஸ்ஸிசிப்பியிலும் (Hurricane Isaac) கூட இதே அலட்சியம் கலந்த கண்துடைப்புதான் கோலோச்சுவதாக செஞ்சிலுவைத் தொண்டர்களே வருந்தியிருக்கிறார்கள்.




# பருக்கள் வருவது ஏன்?

இன்றைய தினம் பருக்களைப் பெரிய பிரச்சினையாகக் கருதி அவதியுறுபவர்கள் அதி-கம். பருக்களைப் போக்க உதவும் இயற்கை வழிமுறைகளை ஓரங்கட்டிவிட்டு, ஊடகங்களில் சொல்லப்படும் செயற்கை அழகுச் சாதனப் பொருள்களை வரம்புமீறிப் பயன்படுத்துகிறார்கள். இதனால், இவர்களுக்குப் பருக்கள் போகிறதோ இல்லையோ, முகத்தின் பொலிவு போவதுதான் உண்மை.

என்ன முகப்பரு?

நம் தோலின் இரண்டாம் அடுக்கில் எண்ணெய்ச் சுரப்பிகள் (Sebaceous glands) ஏராளமாக உள்ளன. இவை அன்ட்ரோஜன் என்ற ஓமோ-னின் தூண்டுதலால், “சீபம்” (Sebum) எனும் எண்ணெய்ப் பொருளைச் சுரக்கின்றன. இந்தச் சீபம் ரோமக்கால்களின் வழியாகத் தோலின் மேற்பரப்புக்கு வந்து, தோலையும் முடியையும் மினுமினுப்பாகவும் மிருதுவாகவும் வைத்துக்கொள்கிறது. இளமைப் பருவத்தில் அன்ட்ரோஜன் ஓமோன் அதிகமாகச் சுரப்பதால், சீபமும் அதிகமாகவே சுரக்கிறது. இதனால், முகத்தில் எண்ணெய்ப் பசை அதிகரிக்கிறது.

மாசடைந்த காற்றில் உள்ள தூசும் அழுக்கும் இந்த எண்ணெய்ப் பசையில் சுலபமாக ஒட்டிக் கொள்ளும். விளைவு, எண்ணெய்ச் சுரப்பிகளின் வாய்ப்பகுதி மூடிக்கொள்ளும். இதனால், தோலுக்கு அடியில் சுரக்கும் சீபம் வெளியே வர முடியாமல், உள்ளேயே தங்கிவிடும். இப்படிச் சீபம் சேரச்சேரத் தோலில் வீக்கம் உண்டாகும். இதுதான் பரு (Acne vulgaris). அடுத்து, சீபம் சுரப்பது அதிகரிக்க அதிகரிக்க எண்ணெய்ச் சுரப்பிகளில் ஏற்படும் இரசாயன மாற்றங்களால் சீபம் வெளியேறும் வழி சுருங்கி விடும். இதுவும் பரு வருவதற்குப் பாதை போடும்.

பருவானது ஆரம்பத்தில் கருநிறக் குருணை (டீடயஉமாநயன) போலத் தோன்றும். அதைப் பிதுக்கினால், வெள்ளை நிறத்தில் குருணைகள் (றூவைநாநயன) வெளிவரும். இந்தச் சமயத்தில் தோலில் இயற்கையாகவே இருக்கிற பற்றீரியாக்கள் வீரியமடைந்து பருக்களை சீழ்ப்பிடிக்க வைக்கும். அழுக்குத் துண்டால் முகத்தைத் துடைத்தால் அல்லது அடிக்கடி பருக்களைக் கிள்ளினாலும் பருக்கள் சீழ்ப்பிடித்து, வீங்கிச் சிவந்து வலிக்கத் தொடங்கும். இதற்குச் சீழ்க்கட்டிப் பருக்கள் (Pustules) என்று பெயர். இவற்றுக்குச் சிகிச்சை பெறவில்லை என்றால், உறைகட்டிகளாக (Cystic acne) மாறிவிடும்.

**என்ன சிகிச்சை?**

பருக்களின் மேல் பூசப்படும் களிம்புகளும் அன்ட்டிபயொடிக் மாத்திரைகளும் ஆரம்பநிலைப் பருக்களைக் குணப்படுத்திவிடும். சீழ்க்கட்டி, உறைகட்டி நிலையில் பருக்கள் இருந்தால், கரும்புள்ளி அல்லது குழிப்பள்ளம் விழுந்து தழும்பாகி முகத்தின் அழகைக் கெடுத்துவிடும். பருக்களைப் பொறுத்தவரை இளம் வயதினரைக் கவலைப்பட வைப்பது இந்த வகைத் தழும்புகள்தான்.

இன்றைய மருத்துவத் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் இந்தத் தழும்புகளை நிரந்தரமாகப் போக்க Chemical Peel, Dermabrasion, கொலாஜென் சிகிச்சை, லேசர் சிகிச்சை, சிலிகன் சிகிச்சை என்று நிறைய வழிமுறைகள் வந்துவிட்டன. இவற்றைத் தேவைக்கு ஏற்பப் பயன்படுத்தி, தழும்புகளை நீக்கி, முகப்பொலிவை மீட்கலாம்.

**பருக்கள் வராமல் தடுக்க...**

முகத்தில் எந்தக் களிம்பைப் பூசினாலும், 20 நிமிடங்களுக்கு மேல் அதை வைத்திருக்கக் கூடாது. காரணம், அதற்கு மேல் களிம்பு தங்கினால், அதில் தூசு சுலபமாக ஒட்டிக்கொள்ள, எண்ணெய்ச் சுரப்பிகள் அடைபட்டு முகப்பருவுக்கு வழி அமைத்துவிடும்.

தினமும் குறைந்தது மூன்று முறை முகத்தைச் சோப் போட்டு இளஞ்சூடான தண்ணீரில் கழுவிச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். அடிக்கடி சோப்பை மாற்றக் கூடாது. சுத்தமான பருத்தித் துண்டால் முகத்தைத் துடைக்க வேண்டும். முகத்தைத் துடைப்பதற்கென்று தனியாகத் துண்டு வைத்துக்கொள்வது இன்னமும் நல்லது. தினமும் இருமுறை வெந்நீரில் ஆவி பிடிப்பது நல்லது.

**கொழுப்பு உணவு வேண்டாம்!**

முகப்பரு உள்ளவர்கள் கொழுப்பு உணவுகளைக் குறைத்துக்கொண்டால், பருக்கள் விரைவில் குணமாகும். எப்படி? உடலில் கொழுப்பு கூடும்போது, கொழுப்பு அமிலங்களும் கூடுமல்லவா? இவை எண்ணெய்ச் சுரப்பி கலங்களை உறுத்திக்கொண்டே இருக்கும். இதன் விளைவால், எண்ணெய்ச் சுரப்பிகளின் துவாரம் மூடிக்கொள்ள, பருக்கள் அதிகரிக்க வாய்ப்பு உண்டாகும். இந்த வாய்ப்பைத் தடுக்கவே கொழுப்பு உணவைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

**கட்டுப்படுத்த என்ன வழி?**

எந்நேரமும் கண்ணாடியின் முன்னால் நின்று கொண்டு பருக்களை விரல்களால் நோண்டுவதை முதலில் கைவிடுங்கள். பருக்களிலிருந்து வெள்ளை நிறக் குருணைகளை வெளியேற்ற பருக்களைக் கிள்ளாதீர்கள் பிதுக்காதீர்கள். மிகவும் தேவைப்பட்டால் மட்டும் இதற்கென்றே இருக்கிற இடுக்கியைப் பயன்படுத்துங்கள்.

நார்ச்சத்து நிறைந்த கீரைகள், காய்கறிகள், பழங்களை அதிகம் உட்கொள்ளுங்கள். தினமும் 3 லீட்டர் தண்ணீர் குடியுங்கள். கொழுப்பு மிகுந்த இறைச்சி, நெய், வெண்ணெய், பாலாடை, முட்டை, கேக், ஐஸ்க்ரீம், சொக்ளேற், பீட்சா, பேர்கர், எண்ணெய் பலகாரம் போன்றவற்றை தவிருங்கள். ஹெல்மெட் மற்றும் சட்டையின் கொலரை இறுக்கமாக அணியாதீர்கள். இந்த வழிமுறைகளால் முகப்பருக்கள் வருடக் கணக்கில் நீடிப்பதைக் கட்டுப்படுத்தலாம்.



- டாக்டர் கு. கணேசன்




# நெற்றிக்கண் அரக்கன்

மாயாபுரி என்னும் நாட்டை ஆண்டுவந்த மன்னன் ராஜபூபதிக்கு ஓர் அழகிய மகள் இருந்தாள். அவள் பெயர் தமிழரசி .

இளவரசியான, தமிழரசி காண்போரை மயங்க வைக்கும் அழகுடையவள். அவள் அழகில் மதிமயங்கி பல இளவரசர்கள் அவளுக்கு மாலையிடத் தவம் கிடந்தனர்.

மன்னன் ராஜபூபதி, தமிழரசிக்குப் பிடித்த இளவரசனையே திருமணம் செய்து வைப்பதற்காக சுயம்பரத்திற்கு ஏற்பாடு செய்தான்.

நாட்டு மக்கள் பரபரப்பாகத் தமிழரசியின் திருமணத்தைப் பற்றிப பேசிக்கொண்டார்கள். சுயம்பரத்திற்கு இன்னும் இரண்டு நாட்கள்தான் இருந்தன.

அந்தச் சமயத்தில் தமிழரசி பூப்பறிக்கத் தன் தோழிகளுடன் மலர் வனத்திற்குச் சென்றிருந்தாள்.

அப்போது திடீரென ஓர் அரக்கன் அங்கு தோன்றினான். இருபதடி உயரம் கொண்ட அந்த அரக்கனுக்கு நெற்றியிலும் ஒரு கண் இருந்தது. அந்த நெற்றிக்கண் மூடி இருந்தது.

"ஹா..ஹா..ஹா" என்று அவன் சிரித்த சிரிப்பொலியில் அவ்விடமே அதிர்ந்தது. தமிழரசியின் தோழிகள் மிரண்டு போனார்கள்.

அந்த அரக்கன் தனது நெற்றிக் கண்ணை சட்டெனத் திறந்ததும் ஒரு பயங்கர ஒளி தோன்றியது. உடனே அவ்விடத்திலுள்ள அனைவரும் அந்த ஒளி வட்டத்தைக் கண்டு மயங்கிப்போனார்கள்.

மயங்கிக்கிடந்த தமிழரசியைத் தூக்கிக் கொண்டு அந்த நெற்றிக் கண் அரக்கன் வானத்தில் பறந்து சென்றான். பலகாடுகள், கடல்கள், சம வெளிகள், மலைகளைக் கடந்து ஒரு குகையில் இறங்கினான்.

யாரும் புகமுடியாத வண்ணம் குகைகளைச் சுற்றிலும் நெருப்பு வளையத்தை ஏற்படுத்தி கொண்டு குகைக்குள் நுழைந்தான்.

மயக்கத்தில் இருந்து தமிழரசி கண்விழித்த போது தன் எதிரே அந்தஅரக்கன் இருப்பதைக்கண்டு அரண்டு போனாள். தான் ஒரு குகையில் அடைபட்டிருக்கிறேன் என்பது அவளுக்கு புரிந்தது

"என்னை எதற்காக இங்குக் கொண்டு வந்திருக்கிறாய்?" என்று பதறிப்போய்க் கேட்டாள்.

உன்னை நான் இன்னும் பத்து நாட்களில் திருமணம் செய்யப் போகிறேன். அதற்காகத்தான் உன்னை இங்கு கொண்டு வந்து சிறைவைத்திருக்கிறேன்.ஹா..ஹா..ஹா"

அவன் சிரிப்பொலி அந்தக்குகை முழுவதும் எதிரொலித்தது.

"அய்யய்யோ... எனக்கு இன்னும் இரண்டு நாட்களில் சுயம்பரம் நடக்க இருக்கிறது. என்னை ஒன்றும் செய்து விடாதே..."

"ஏய் பிதற்றாமல் சும்மாயிரு இன்னும் பத்து நாட்களில் சித்ரா பௌர்ணமி வர இருக்கிறது. இந்த நன்னாளில் உலகிலேயே அழகான பெண்ணாகிய உன் கழுத்தில் மாலையிட்டு அன்றே உன்னை காளிக்குப் பலி கொடுத்து விடப்போகிறேன். ஹா..ஹா..ஹா அதன் பின்னர் இந்த உலகமே என் காலடியில் தான்..."

அவன் சொன்னதைக் கேட்டு, தமிழரசி துடிதுடித்துப் போனாள். ,

"அய்யோ... என்னைக் காப்பாற்ற யாருமே இல்லையா?... என்று அலறிக் கொண்டு குகையில் இருந்து தப்பிக்க முயன்றாள்.

ஆனால் குகையைச் சுற்றிலும் அரக்கன் நெருப்பு வளையத்தை ஏற்படுத்தி இருக்கிறானே!

"ஏய்... இந்தக் குகையை விட்டு நீ தப்பிக்க நினைத்தால் அது இயலாத காரியம். என் அனுமதியில்லாமல் ஒரு கொசுகூட இதனுள் நுழையவும் முடியாது. வெளியேறவும் முடியாது. ஹா..ஹா..ஹா" என்று அலறியவாறே தன் உருவத்தைக் குறுக்கிக் கொண்டான்.

இளவரசி தமிழரசியை நோக்கித் தன் நெற்றிக்கண்ணைத் திறந்ததும் அதிலிருந்து வெளிப்பட்ட பயங்கர ஒளி, அவளை மயங்கச்செய்தது.

பின்னர் அரக்கனின் கரங்கள் சிறகுகளாக மாறின. குகையை விட்டு வெளியே வந்து பறந்து எங்கோ சென்றான்.

மலர் வனத்தில் மயங்கிக் கிடந்த தமிழரசியின் தோழிகள் சற்று நேரத்தில் மயக்கம் தெளிந்து கண் விழித்தார்கள்.

இளவரசி தமிழரசி அவ்விடத்தில் இல்லாததைக் கண்டு கலங்கினார் அந்த நெற்றிக்கண் அரக்கன் தான்



அவளைத் தூக்கிச் சென்றிருக்க வேண்டும் என்று கருதி அனைவரும் மன்னர் ராஜபூபதியிடம் போய் நடந்ததைச் சொன்னார்கள்.

ராஜபூபதிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இன்னும் இரண்டு நாட்களில் தமிழரசிக்கு சுயம்பரம் என்று அறிவித்த சமயத்தில் இப்படியொரு சோதனையா என்று பரிதவித்துப் போனான்.

இளவரசி காணாமற போன செய்தி நாடெங்கும் காட்டுத்தீ போலப் பரவியது.

இளவரசி தமிழரசியை யார் கண்டுபிடித்துக் கொண்டு வருகிறார்களோ அவர்களுக்கே அவளைத் திருமணம் செய்து வைத்து, தன் நாட்டில் பாதியை அளிப்பதாகவும் மன்னன் ராஜபூபதி தண்டேரா மூலம் அறிவித்தான்.

பல இளைஞர்கள் தமிழரசியைத் தேடிப் புறப்பட்டார்கள். ஆனால் அவர்களால் அவளைக் கண்டு பிடிக்க முடியாது. ஏனென்றால் தமிழரசி பல காடுகள், கடல்கள், சமவெளிகள், மலைகள் தாண்டி பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் ஒரு குகையில் அடைபட்டிருக்கிறாளே!

மன்னன் ராஜபூபதியின் அரண்மனையில் சமையல்வேலை பார்த்துவரும் சாமுண்டியின் மகன் வீரபாண்டி ஓர் வீரன் அவன் திடகாத்திரமான உடல்வலிமை கொண்டவன் இளவரசனுக்குரிய கம்பீரமுடையவன்.

அவன் இளவரசி காணாமற போன செய்தியைக் கேள்விப்பட்டு அவளைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு காட்டின் வழியே சென்று கொண்டிருந்தான்

வழியில் "என்னைக் காப்பாற்றுங்கள்..." என்ற கூக்குரல் திடீரென்று கேட்டது. வீரபாண்டி சுற்றும் முற்றும் பார்த்தான்.

தூரத்தில் ஒரு மலைப்பாம்பு தெளிந்து கொண்டிருந்தது. ஒரு வேளை மலைப்பாம்புதான் பேசுகிறதோ என்று நினைத்து அதனை நெருங்கினான் வீரபாண்டி.

பதினைந்தடி நீளமுள்ள அந்த மலைப்பாம்பு ஒரு பாறையின் இடுக்கில் சென்று கொண்டிருந்தது. அந்தப் பாம்பை நெருங்கிய வீரபாண்டி அதிர்ச்சியுற்றான்.

காரணம் பாம்பின் வாய்க்குள் ஒரு சாது அகப்பட்டிருந்தார். அந்த சாதுவின் தலைப்பகுதி மட்டும் வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. அவரை விழுங்க முடியாமல் மலைப்பாம்பு திணறிக் கொண்டிருந்தது.

உடனே வீரபாண்டி பாம்பின்மேல் பாய்ந்தான் தன் உடைவாளால் பாம்பின் உடம்பைக் குத்திக் கீறினான். பாம்பு சீறியது. ஆனால் சற்றும் அஞ்சாத வீரபாண்டி மலைப்பாம்பைக் கொன்று அதன் உடம்பைப் பிளந்து சாதுவைக் காப்பாற்றினான்.

சாது நீண்ட பெருமூச்சுடன் வெளியே வந்தார்...

மகனே... என்னை இப்பாம்பிடமிருந்து காப்பாற்றியதற்கு மிகவும் நன்றி. உன் உதவியை என் உயிர் உள்ளவரை மறக்க மாட்டேன்.." என்றார்.நன்றிப்பெருக்குடன்

" நான் வருகிறேன் சுவாமி!.. என்று அவ்விடத்தை விட்டு அகல முற்பட்டான் வீரபாண்டி ..

"நில் மகனே! இவ்வளவு அடர்ந்த கானகத்திற்கு நீ வந்த காரணத்தை நான் தெரிந்து கொள்ளலாமா?"

"சுவாமி ... காணாமற் போன இளவரசி தமிழரசியைத் தேடி வந்தேன்" என்று இளவரசி காணாமற் போன விவரத்தைச் சாதுவிடம் சொன்னான் வீரபாண்டி.

" மகனே.. உனக்கு நான் ஒரு உதவி செய்கிறேன்..."

" என்ன உதவி சுவாமி?"

"என்னுடன் வா..." என்று தம் குடிலுக்கு அவனை அழைத்துச் சென்ற சாது ஒரு கண்ணாடியை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

"இது சாதாரண கண்ணாடியல்ல. மாயக்கண்ணாடி இந்தக் கண்ணாடியைத் திறந்தால் நீ நினைக்கும் காட்சி உனக்குக் கிடைக்கும்.

" அப்படியா..? என்று அதிசயத்துப் போனான் வீரபாண்டி.

"நீ இந்தக் கண்ணாடியைத் தேய்த்தால் இந்தமாயக்கண்ணாடி நீ விரும்பும் இடத்திற்கு உன்னை உடனே கொண்டு செல்லும். இதை வைத்து நீ எளிதில் இளவரசியைக் கண்டுபிடித்து விடலாம்.." என்றார்.

"மிக்க நன்றி சுவாமி.. நான் வருகிறேன்! ..

"ஒரு நிபந்தனை மகனே! இந்தக் கண்ணாடி யார் கையிலிருந்து நழுவி உடைந்தாலும். உடைத்தவரின் உடம்பு சுக்கு நூறாய் வெடித்துச் சிதறிவிடும். ஜாக்கிரதை!" என்று எச்சரித்து அனுப்பினார். சாது.

வீரபாண்டி அவரிடமிருந்து விடைபெற்றுச் சென்றான்.

வழியில் ஒரு பூஞ்சோலையில் அமர்ந்த இளவரசியை நினைத்துக்கொண்டு கண்ணாடியைத் திறந்தான்.

என்ன ஆச்சரியம்!

இளவரசி தமிழரசி அந்தக் குகையில் அழுது கொண்டிருப்பது கண்ணாடியில் தெரிந்தது. அவள் அருகில் அந்த நெற்றிக் கண் அரக்கன் நின்று கொண்டிருந்தான்.

வீரபாண்டி நிகழ்ந்தவற்றை ஊகித்துக்கொண்டு கண்ணாடியைத் தேய்த்தான். உடனே மாயக்கண்ணாடி அவனை அந்தக்குகைக்குள் கொண்டு சென்றது.

யாரோ ஒரு இளைஞன் தீடிரென்று தன் குகைக்குள் பிரவேசித்தது அந்த நெற்றிக்கண் அரக்கனுக்கு ஆச்சரியமாக இருந்தது. கூடவே அதிர்ச்சியாகவும் இருந்தது.

"ஏய்..யார் நீ? என் அனுமதியின்றி எப்படி இந்தக் குகைக்குள் வந்தாய்?" என்று கர்ஜித்தான்.

" நான் இளவரசியை உன்னிடமிருந்து மீட்டுப்போக இந்த மாயக்கண்ணாடியின் உதவியால் வந்திருக்கிறேன்."

"ஹா..ஹா..ஹா மீட்டுப்போவதற்கு நீ உயிருடன் இருந்தால் தானே?" என்று வீரபாண்டியில் மீது பாய்ந்தான் நெற்றிக்கண் அரக்கன்.

அப்போது தன் உடைவாளால் வீரபாண்டி அரக்கனின் நெற்றிக் கண்ணில் பாய்ச்சினான். அரக்கன் துடிதுடித்துப் போனான். அரக்கனிடமிருந்து சக்தியெல்லாம் மறைந்து போயிற்று. குகையைச் சுற்றியிருந்த நெருப்பு வளையமும் மறைந்தது.

அரக்கன் ஓடி வந்து வீரபாண்டியின் கையிலிருந்த மாயக் கண்ணாடியைப் பறித்துக் கொண்டான்.

வீரபாண்டியும், இளவரசியும் குகையிலிருந்து தப்பி ஓடினார்கள். அரக்கன் கண்ணாடியைத் திறந்து பார்த்தான். அப்போது எதிர்பாராத விதமாக அது தவறிக்கீழே விழுந்து உடைந்தது

அந்தோ பரிதாபம்!

கண்ணாடி உடைந்த மறுவிநாடியே அரக்கனும் சுக்கு நூறாய் வெடித்துச்சிதறிப் போனான்.

வீரபாண்டியும் தமிழரசியும் பல நாட்கள் அலைந்து திரிந்து ஒரு பறக்கும் கம்பளத்தின் உதவியால் மதுராபுரிக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஒரு நல்லநாளில் வீரபாண்டிக்கும் தமிழரசிக்கும் திருமணம் நடந்தேறியது. மன்னன் ராஜபூபதி வாக்களித்தபடி தன் நாட்டில் பாதியைப் பிரித்துக் கொடுத்து அதற்கு வீரபாண்டியையே அரசனாக்கினார்.

**"வீரம்,விவேகம்,விடாமுயற்சி இம்மூன்றும் இருந்தால் வெற்றியடைவது உறுதி.."**

# தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் விரிவான தரவு சேகரிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சமூக, பொருளாதார மற்றும் மக்களியல் நிலைமைகளை மதிப்பிடுவதற்குத் தேவையான சரியான நிரற்படுத்தப்பட்ட புள்ளிவிபரத்தரவுகளை சேகரிக்கும் வகையில் தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கையில் முதற் தடவையாக விவசாய, கைத்தொழில வர்த்தக, சேவைகள் பிரிவுகளை உள்ளடக்கிய பொருளாதாரத் தொகைமதிப்பை 2013/14 ஆண்டுகளில் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.சி.ஏ. குணவர்த்தன அறிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் தகவல் தருகையில்,

தொகை மதிப்பு நடவடிக்கை கைத்தொழில், வர்த்தக, சேவைகள் பிரிவுகள், மற்றும் விவசாய பிரிவை உள்ளடக்கும் பொருட்டு கட்டங்களாக மேற்கொள்ளப்படுகிறது. இலங்கையில் கைத்தொழில், வர்த்தக, சேவைகளில் ஈடுபட்டுள்ள சகல நிறுவனங்களும், வீடுகளும் 2013இல் நிரற்படுத்தப்பட்டதுடன் அதன் பொருட்டு மக்கள் வழங்கிய ஒத்துழைப்பிற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அவ்வாறு நிரற்படுத்தப்பட்ட நாடளாவிய சகல பொருளாதாரக் கூறுகளினதும் புள்ளிவிபர முறைமைக்கேற்ப தெரிவு செய்யப்பட்ட மாதிரி ஒன்றின் ஊடாக தரவு சேகரித்தல் 2014இன் இறுதிக் காலாண்டின் போது மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுககப்பட்டுள்ளது.

அவ்வாறு தரவு சேகரிப்பதற்கு தங்களின் நிறுவனம், வீடு தெரிவு செய்யப்பட்டுள்ளதென்பதை மகிழ்ச்சியாக தெரிவித்துக் கொள்கின்றேன். உரிய தரவு சேகரித்தலிற்கு புள்ளிவிபரத் திணைக்கள அலுவலர்கள் இக் காலப்பகுதியில் உங்கள் நிறுவனத்திற்கு வீட்டுக்கு வருகை தருவர்.

தொகை மதிப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பொருளாதாரத் தொகைமதிப்பின் கைத்தொழில், வர்த்தக சேவைகள் கூறுகளின் விரிவான தகவல்கள் சேகரிக்கப்படும். இக்கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நாட்டின் அனைத்து பிரஜைகளும் அரச கொள்கை வகுபாக்கம் மற்றும் தீர்மானம் எடுத்தலுக்குத் தேவையான தரவுகளை நாட்டின் அபிவிருத்தியின் பொருட்டு, தொகைமதிப்பு அலுவலர்களுக்கு வழங்கவேண்டும்.

தொகைமதிப்பின் போது சேகரிக்கப்படும் தனிப்பட்ட அல்லது நிறுவன மட்டத் தகவல்களை இயன றவரை அந்தரங்கமாக வைத்திருக்க வேண்டியதுடன் அத்தகவல்களை எக்காரணம் கொண்டும் ஏதேனும் தரப்பினருக்கு வெளியிடக்கூடாது. என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே உரிய சரியான தகவல்களை வழங்கி பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்குமாறு அவர் மக்களை கேட்டுள்ளார்.

# அதிபர் நியமிக்கப்படவில்லை விசனமடையும் பெற்றோர்

(கரணவாய்)

நெல்லியடி மத்திய கல்லூரியின் அதிபர் ஓய்வு பெற்றுச்சென்று இருவாரங்கள் கடந்துள்ள நிலையில் இதுவரை இப்பாடசாலைக்கு புதிதாக அதிபர் நியமிக்கப்படவில்லை என மாணவர்களும் பெற்றோர்களும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கடந்த 5ஆம் திகதி குறித்த பாடசாலையின் அதிபர் ஓய்வு பெற்றுச் சென்றுள்ள நிலையில் இதுவரை புதிய அதிபர் நியமிக்கப்படவில்லை. இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டும் இதுவரையில் எவரும் நியமிக்கப்படவில்லை எனவும் இவ்விடயத்தில் வடமாகாண கல்வித் திணைக்களத்தினர் பாராமுகமாக இருப்பதாகவும் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (18)

# பாராட்டி வாழ்த்து



(யாழ்ப்பாணம்)

யா.நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளியைப் பெற்று சு. பிரவின் என்ற மாணவன் சித்தியடைந்துள்ளார். இவரையும் 100 புள்ளிகளுக்கு பாடசாலை சமூகத்தினர் பெற்ற மாணவர்களையும் இவர்களது வெற்றிக்கு உழைத்த அதிபர் பா. சிவராஜா, ஆசிரியர், திருமதி க.ஜெயராணி ஆகியோரையும் பாராட்டி வாழ்த்தியுள்ளனர்.

# 2015 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு கரவெட்டி பிரதேச சபையால் நிறைவேற்றம்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் (கரவெட்டி) மாதாந்த கூட்டத்தில் சபையினால் 2015 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ள. அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டு முன்மொழிவுகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன

இக்கூட்டம் அண்மையில் உபதவிசாளர் தலைமையில் நடைபெற்றதுடன் இதில் பல்வேறு விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

இதன்படி 2015 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு முன்மொழிவுகள், சபை உறுப்பினர்களால் ஏகமனதாக நிறைவேறின. மேலும் நெல்லியடி மரக்கறி சந்தைக்கும் மீன் சந்தைக்கும் இடையில் பாதை அமைக்கவேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு பாதை அமைப்பது என முடிவு எடுக்கப்பட்டது.

அத்துடன்முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு சுழற்சி முறையில் தரிப்பிடங்கள் ஏற்படுத்தப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய நெல்லியடி நகர வீதிகளில் 70 மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள நிலையில் மின்விநியோகத்திற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் 2015 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல் இந்த மாதத்திற்கிடையில் நிறைவடையும் என உபதவிசாளர் தெரிவித்தார். (18)

# நூலகவியல் காட்சிக்கூடம்

யாழ்.சுன்னாகம் பொதுநூலகத்தில் நூலகவியல் பாடநெறி கற்கும் மாணவர்களுக்கான காட்சிக் கூடமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தேசிய வாசிப்பு மாதத்தின் ஒரு கட்டமாகவே இந்தக் காட்சிக் கூடம் நிறுவப்பட்டுள்ளது.

இந்தக் காட்சிக் கூடத்தில் நூலகவியல் கற்கை நெறி சார்ந்த ஏராளமான நூல்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

இதற்கு முன்னர் உள்ளூர் எழுத்தாளர்களின் காட்சிக் கூடம், பண்டைக் கால நாணயங்கள், பித்தளைப் பொருட்கள் என்பவற்றின் காட்சிக் கூடம் என்பன அமைக்கப்பட்டதுடன் கடந்த பத்து வருடங்களாகப் பத்திரிகைகளில் வெளிவந்த முக்கிய செய்திகள், சம்பவங்களின் தொகுப்புக்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளனது. (48)

# பதிவிறக்கப் பெட்டகம்

பாரதிராஜா, ஸ்ரூடியோக்களில் இருந்து நிவாஸின் உதவியோடு வெளிப்புறங்களுக்குத் தமிழ் சினிமாவைப் பெயர்த்தார் என்றால், பாலு மகேந்திரா, அசோக்குமார் ஆகியோரின் துணையுடன் மகேந்திரன் அதன் உள்வெளிகளுக்குள் ஊடுருவ முயன்றார். ஆயினும் ருத்ரய்யாவின் பெயரை அந்தப் பட்டியலில் வைத்து அலசும்போது பெருவாரியான சினிமா பத்திரிகையாளர்கள்ஃஆய்வாளர்கள் பெருமூச்செறிவதை நாம உணர முடியும்.

'அவள் அப்படித்தான்' என்ற படம் அளித்த நம்பிக்கைக் கீற்று அவர்களின் மனதை வருடிச் செல்வதை நுகர முடியும். எரிக வோன் ஸ்றோஹைம் 1924–ல் இயக்கிய க்ரீட் என்ற தனது படத்துக்காக இன்றளவிலும் ஹொலிவுட்டின் சாத்தியப்படாத கனவுகளின் நினைவுக்குறியாக உறைந்திருப்பதைப் போல, ருத்ரய்யாவும் அவள் அப்படித்தானுடன் தமிழ் சினிமாவின் சாத்தியப்படாத சின்னமாகியிருப்பதை அனுமானிக்க முடிகிறது.

– சொர்ணவேல்

வசூலில் பெரிய வெற்றியைப் பெறாவிட்டாலும் கூட அவள் அப்படித்தான் தமிழ்த் திரைப்பட வரலாற்றில் மறுக்க முடியாத படமாக நிலைபெற்றுவிட்டது. 1980–ல் வெளியாகி பெரிய தோல்வியைச் சந்தித்த கிராமத்து அத்தியாயம் அவரது இரண்டாவது படமும் இறுதிப் படமுமானது. தமிழ்த் திரையில் ருத்ரய்யாவுக்குக் கிடைத்தது ஓர் அத்தியாயம் மட்டும்தான் என்பது கசப்பான உண்மை. ஆனால் அந்த ஓர் அத்தியாயத்தை ஒரு வரலாறாக மாற்றிய பெருமையுடன் அவர் 18.11.2014 அன்று மறைந்து விட்டார்.

– செல்லப்பா

கோபத்தால் உந்தப்பட்ட ஆளாக ஆறுமுகம் எனக்குத் தோன்றினார். ஒருவேளை அதனால்தான் ஆறுமுகம் என்ற தன் பெயரை ருத்ரய்யா என்று மாற்றிக் கொண்டார் என நினைக்கிறேன். அவரது முதல் படம் எங்கள் குழுவின் செல்லப் படமாக இருந்தது. அதனால் வெறும் பேச்சு மட்டுமல்ல, செய்தும் காட்டுவோம் என மற்றவர்களிடமிருந்து நாங்கள் வித்தியாசப்பட்டு நின்றோம்.

அவள் அப்படித்தான் படத்தின் முதல் காட்சியில், நான் கமெராவைப் பார்த்து "கொஞ்சம் லெஃப்ட்ல உட்காருங்க" என்று கூறுவது, இடதுசாரி சிந்தனையை ரசிகர்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும் என ஊக்குவிக்கும் குறியீடுதான். அப்போதைய தமிழ் சினிமாவின் மீது இருந்த கோபத்தின் விளைவாகவே அவள் அப்படித்தான் துவங்கப்பட்டது. சலிப்பை ஏற்படுத்தும் படமாக அது மாற வாய்ப்பிருந்தது ஆனால் அப்படி ஆகவில்லை.

'ராஜா என்னை மன்னித்துவிடு' என்ற ருத்ரய்யாவின் இரண்டாவது படத்திலும் நான் நடிப்பதாக இருந்தது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக அந்தப் படத்தை எங்களால் தொடங்க முடியவில்லை. 'சகலகலா வல்லவன்' போன்ற படங்களின் வெற்றி, எங்கள் கூட்டணியை தடுத்தது.

ருத்ரய்யா வித்தியாசமான மனிதர். அவரிடம் பல படங்களுக்கான கதைகள் இருந்தன. ஆனால், அவரால் இரண்டு படங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. தனது படைப்பின் மீது அதீதமான பெருமை கொண்டவராக ருத்ரய்யா இருந்தார். வேறு யாரிடமும் பணியாற்ற அவர் விரும்பவில்லை. சினிமாவைப் பற்றி நிறைய தெரிந்துவைத்திருந்ததால், தன்னை யாரும் கட்டுப்படுத்துவதை அவர் விரும்பவில்லை. தான் கட்டுப்படுத்துவதையே அவர் விரும்பினார். அவள் அப்படித்தான் திரைப்பட தயாரிப்பில் இருந்த தோழமை, மற்ற படங்களிலும் இருக்கும் என்று அவர் நினைத்தார். ஆனால் அது நடக்கவில்லை.

– கமலஹாசன்

தி.ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்' நாவலைத்தான் ருத்ரய்யா தனது முதல் படமாக எடுக்க எண்ணியிருந்தார். அதற்கு நாயகனாக கமல்ஹாசனை மனதில் வைத்திருந்தார். அதற்கான திரைக்கதையை நான்தான் முழுவதும் எழுதினேன். திரைக்கதைக்கு தி. ஜானகிராமனிடம் ஒப்புதல் வாங்குவதற்கு ரயிலில் என்னை டெல்லி அனுப்பிவைத்தார். அந்தப் படம் வெளி வரவே இல்லை.

ருத்ரய்யா நண்பர்கள் சூழ இருந்தவர். ஒரு கம்யூன் லிவிங் சூழ்நிலையில்தான் 'அவள் அப்படித்தான்' படப்பிடிப்பு நாட்கள் இருந்தன. எல்லா நண்பர்களும் சேர்ந்து கூடிக் களிக்கும் இடமாக அவரது வீடு திகழ்ந்தது. படம் எடுத்துப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்றெல்லாம் பெரிய ஈடுபாடு அவருக்கு இருந்ததில்லை. சம்பளம் என்று யாருக்கும் பேசவில்லை. தேவையான பணத்தை வாங்கிக்கொள்வார்கள். அந்த மாதிரியாகத்தான் தனது படத் தயாரிப்பு நிறுவனத்தை வைத்திருந்தார்.

ஆனால், அவர் நினைத்த சினிமாக்களைச் செய்ய கடைசிவரை முடியவில்லை. அவரது கனவு பொய்த்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

– வண்ணநிலவன்

# மன்னாரில் 370 விவசாயிகளுக்கு பெரிய வெங்காய விதை வழங்கல்



மன்னார் மாவட்ட விவசாயிகள் மத்தியில் பெரிய வெங்காய செய்கையை ஊக்குவிக்கும் வகையில் விவசாயிகளுக்கு பெரிய வெங்காய விதைகள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காலை மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அருகங்குன்று கிராமத்தில் இடம் பெற்றது.

யு.எஸ்.ஏ.ஐ.டி அமைப்பின் நிதியுதவியுடன் விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் குறித்த பெரிய வெங்காய விதைகள் வழங்கி வைக்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 370 விவசாயிகளுக்கு குறித்த பெரிய வெங்காய விதைகள் மற்றும் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக விவசாய பிரதி அமைச்சர் வை.ஜி.பத்ம சிறி,சிறப்பு விருந்தினராக யு.எஸ்.ஏ.ஐ.டி அமைப்பின் இலங்கைக்கான உதவிப்பணிப்பாளர் தோமஸ் போமா,அமைச்சர் றிஸாட் பதியுதீனின் மாவட்ட இணைப்பாளர் என்.எம்.முனவ்பர், மற்றும் வடமாகாண திவிநெகும திட்ட பணிப்பாளர் அனுர வீர ரட்ண உட்பட விவசாய திணைக்கள அதிகாரிகள்,பிரதேச செயலாளர்கள்,திணைக்களத் தலைவர்கள்,விவசாயிகள் என பலர் கலத்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் நூறு ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய வெங்காய செய்கையை மேற்கொண்டு ஆயிரம் டொன் பெரிய வெங்காய உற்பத்தியை பெற்றுக்கொள்வதே இதன் நோக்கம் என விவசாய பிரதி அமைச்சர் வை.ஜி.பத்மசிறி தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு பெரிய வெங்காய விதைகள் வழங்கப்பட்டதோடு, உபகரணங்களும் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து அக்கிராமத்தில் உள்ள விவசாயி ஒருவருடைய விவசாய காணியில் பெரிய வெங்காய விதைகள் வைபவ ரீதியாக நாட்டப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இராசமடு கிராமத்தில் உள்ள தனி நபர் ஒருவருடைய தோட்டத்திற்கு சென்ற பிரதி அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் மரக்கறி செய்கையினை பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

# குன்றும் குழியுமாக காணப்படும் பூவரசங்குளம்-நானாட்டான் வீதி

## கவனமெடுப்பார்களா அதிகாரிகள்



பூவரசங்குளம் தொடக்கம் நானாட்டான் வரை உள்ள 5 கிலோ மீற்றர் தூரம் கொண்ட பிரதான வீதி மிகவும் குன்றும், குழியுமாக காணப்படுகின்றமையினால் அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியை 50 இற்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் பயன்படுத்துகின்றனர்.நானாட்டான் ம.வி பாடசாலை,நானாட்டான் வைத்தியசாலை, பிரதேச செயலகம், என்பன அப்பகுதியில் காணப்படுகின்றன.

தற்போது மழைக்காலம் என்பதனால் குறித்த வீதி மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. பாடசாலை சீருடையுடன செல்லும் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

பல தடவைகள் இது விடயத்தில் அரச உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அந்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே இப்பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் நலனை கருத்திற்கொண்டு இவ்வீதியை மிக விரைவில் புனரமைத்து தரும்படி கிராம மக்கள் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இந்து ஆலயங்களில் கடமைபுரியும் குருமாரின் விபரங்கள் சேகரிப்பு

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கையில் உள்ள இந்து ஆலயங்களில் கடமை புரியும் இந்து குருமார்களின் விபரங்களை சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அதற்கமைய குருமார்கள் தாம் கடமை செய்யும் ஆலயத்தின் தலைவர், செயலாளரின் பதவி முத்திரையோடு கூடிய உறுதிப்படுத்தலோடு பின்வரும் விபரங்களை திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்-றனர்.

குருவின் முழுப்பெயர், தற்போது பணிபுரியும் ஆலய முகவரி, தற்போதைய முகவரி, நிரந்தர முகவரி, பிரதேச செயலகப் பிரிவு, மாவட்டம், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், திணைகளத்தால் வழங்கப்-பட்ட அடையாள அட்டை இலக்கம், அந்தணராயின் குருகுலக்கல்வி, ஆசாரிய-பிஷேகம் தொடர்பான சான்றிதழ்கள், அந்தணரல்லாதவராயின் நிறுவன-மொன்றில் குருவாக பயின்று பெற்ற கல்வித்தகைமை என்பவற்றை குறிப்பிட்டு பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல 248 1/1, காலி வீதி, கொழும்பு - 04. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

விபரங்களை அனுப்பும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "இந்து குருமார் விபரம் 2014" எனக்குறிப்பிடுதல் வேண்டும். விண்-ணப்ப படிவத்துடன் கட்வுச்சீட்டுக்கு பயன்படுத்தப்படும் அளவினையுடைய புகைப்படமொன்றினையும் இணைத்து அனுப்ப வேண்டுமென திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாடசாலைகளின் அசண்டையீனமே அடையாள அட்டை பெற தாமதம்

## ஆட்பதிவுத் திணைக்களம் குற்றச்சாட்டு

(கொழும்பு)



எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் இதுவரை தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாமைக்கு ஒரு சில பாடசாலைத் தலைமைகளின் கவனக்குறைவே காரணமென ஆட்பதிவுத் திணைக்களம் குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து திணைக்களம் தெரிவித்துள்ளதாவது,

மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை கால நேரத்துடன் பெற்றுக்கொடுப்பது தொடர்பான சுற்று நிருபங்கள் பாடசாலைத் தலைமைக-ளுக்கு ஏற்கனவே திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், இது தொடர்பில் பல பாடசாலைத் தலைமைகள் போதிய கவனம் செலுத்தா-மலும் உரிய காலத்திற்குள் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான போதிய நடவடிக்கைகளை எடுக்காமலும் தவறியுள்ளனர்.

இவற்றினால் பரீட்சை நெருங்கியுள்ள இறுதி நேரத்தில் மாணவர்கள் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமத்தை எதிர்நோக்கியுள்-ளனர். பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஏறக்குறைய 50 ஆயிரம் மாணவர்கள் தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவதில் தவறியுள்ளனர்.

அத்துடன், தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சில பாடசாலை அதிபர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஏறக்குறைய 3 ஆயிரம் விண்ணப்பங்களில் பல பிழையான தகவல்கள் காணப்படுகின்றன.

இத்தவறுகளினால் குறித்த மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதில் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்றும் கூறினார்.

# கிறிஸ்தவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு புதியகட்சி




கிறிஸ்தவ மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவே தமது கட்சி உதயமாகியது என கிறிஸ்தவ காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் என்.விஸ்ணுகாந்தன் தெரிவித்துள்ளார். வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று கிறிஸதவ மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றனர். அவர்களது பிரச்சினை தொடர்பில் கிறிஸ்தவ சமய மக்கள் பிரதிநிதிகள் கூட கவனம் செலுத்துவதில்லை.

சுதந்திரமாக மத போதனைகளை செய்ய முடியவில்லை. இலங்கையின் 25 மாவட்டங்களிலும் கிறிஸ்தவர்கள் வாழ்கின்றனர். தமிழ்மொழி பேசும் கிறிஸ்தவர்கள், சிங்கள மொழி பேசும் கிறிஸ்தவர்கள் என இரு பகுதியினர் உள்ளனர். அவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து இக் கட்சி உதயமாகியுள்ளது. இதேவேளை இக் கட்சி இனங்களுக்கடையில் அல்லது மதங்களுக்கிடையில் பிளவினை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதாக அமையாது. தனித்து கிறிஸ்தவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை கண்டு கொள்ளும் செயற்பாட்டை முன்னெடுக்கும். குறிப்பாக இலங்கையில் சுமார் 15 இலட்சம் கிறிஸ்தவர்கள் உள்ளனர். அவர்களை ஒன்றிணைத்து பலமான கட்சியாக பரிணமிப்பதனூடாக நாடாளுமன்றத்திற்கு சிறந்த கிறிஸ்தவ உறுப்பினர்களை அனுப்பி அதனூடாக கிறிஸ்தவர்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# வவுனியாவில் அடை மழை வீடுகளின் சுவர்கள் இடிந்தன



(வவுனியா)

வவுனியால் கடந்த சில நாட்களாக பெய்ந்து வரும் அடை மழையின் காரணமாக 5 வீடுகளின் மண் சுவர்கள் இடிந்து வீழந்தமையால் அவ்வீடுகளில் வசித்தவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கடும் மழை பெய்து வருகிறது. இம்மழை காரணமாக வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கற்பகபுரம் கிராமத்தில் ஒரு வீடும், வெண்கல செட்டிகுளம் பிரிவுக்குட்பட்ட செட்டிகுளம் கிராமத்தில் நான்கு வீடுகளுமாக மொத்தம் ஐந்து வீடுகளின் மண் சுவர்கள் இடிந்து விழுந்துள்ளன. இதன் காரணமாக அந்தவீடுகளில் வசித்து வந்த 5 குடும்பங்களைச் சேர்ந்த 20 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# க.பொ.த. (சா/த) மாதிரி வினாத்தாள்

## G.C.E. (O/L) Examination model Paper

### English

**TEST 1**

**Read and match the names of the objects (A) and WHAT YOU DO (B) with them. Write the letter of the object in the correct box.**

| A<br>OBJECTS | B<br>WHAT THEY DO | |
|---|---|---|
| a. A knife | serve curry | ☐ |
| b. A pen | chope fire wood | ☐ |
| c. A ruler | cut vegetable | ☐ |
| d. An axe | write a letter | ☐ |
| e. A spoon | draw a straight line | ☐ |



**TEST 2**

**Read the following events in the "Today's Events" column in a news paper. Then answer the questions given below.**

| TODAY'S EVENTS | |
|---|---|
| 8.30 a.m | A photographic Exhibition "Wonders of Nature" organized by The Wild Life Society at the Art Gallery, Colombo -7 |
| 9.00 a.m | Opening of a new children's ward at General hospital Galle. Chief Guest Dr.Millton Frost |
| 10.00 a.m | Tamil Literacy Day at Town Hall Chilow. Guest speaker Prof. Arul Sivam. |
| 1.30 p.m | District Volly Ball meet at Suhada ground Badulla. |
| 2.00 p.m | Monthly meeting of the Sunshine Sports Club at Royal Beach Hotel, Bentota. |



a. Which event is at 2 p.m.? ..............................................

b. Where is Suhada Ground ? ..............................................

c. What is the name of the photographic exhibition? ..............................

d. At what time will Dr.Milton Frost be at General Hospital, Galle? ...................

e. What is the event at Town Hall, Chilow? ..............................................

**TEST 3**

**Read the following paragraph and answer the questions given below.**

> Saman walks to school everyday. The walk from to school takes him only fifteen minutes. He usually walks to school with his friend Keerthi. Today Keerthi's uncle Nimal took both of them to school in his car.

a. How does Saman usually go to school? ..............................................

b. How long does he take to go to school ? ..............................................

c. What is his friend's name ? ..............................................

d. How did Saman go to school today ? ..............................................

e. What is the name of uncle of Keerthi ? ..............................................


**TEST 4**

**In the following passage, underline the correct word / words in the brackets.**

(1) (which, Because, As soon as) the bell for the intervel rang, the school children of grade six ran to the playground. They played there (2) (when, until, while) the intervel was over. (3) (when, while, so) the intervel was over, they ran back to their class room. A few boys remained in the playground even (4) (before, after, until) the had rung. Their class teacher who was angry said he would not allow them in (5) (if, since, unless) they apologized.

**TEST 5**

**Write 5 sentences about the picture given below.**



01. ..............................................

02. ..............................................

03. ..............................................

04. ..............................................

05. ..............................................

**TEST 6**

**Imagine you are the head prefect of your school. Write five rules which you want the children of your school to obey during school hours.**

01. ..............................................

02. ..............................................


03. ..............................................

04. ..............................................

05. ..............................................

**TEST 7**

**Raja and his brother visited the museum last week. The route they took is shown by the dotted line. Describe the route they took from the central bus stand to the museum. (Mention the palces they went to and passed on this way)**




..............................................

..............................................

..............................................

..............................................

**TEST 8**

**Write a paragraph on one of the following. Use about 50 words**

**a. Water should not be wasted**

**b. How we can keep our body healthy.**

..............................................

..............................................

..............................................

**TEST 9**

**write full answers for the following questions.**

1. **what is your school's name?** ..............................
2. **What is the type of your school?** ..............................
3. **In which grade are you studying?** ..............................
4. **Who is your principal ?** ..............................
5. **How many teachers are there?** ..............................
6. **Is there a library in your school?** ..............................
7. **Does your school have big buildings?** ..............................
8. **Are you school have big buildings?** ..............................
9. **What special things are there in your school?** ..............................
10. **What are you going to do in your future?** ..............................

**TEST 10**

**Read the poem and answer the questions given below**

**Cage Bird and Sky Bird**

Cage Bird swung
From an apple tree
And his cage was of silver
And ivory
Nobody can be so happy, so happy,
sang the Cage Bird.

Sky Bird sang
From the a cloudless sky,
And his wings were wide
And bright his eyes
Nobody can be so glad as I;
Sang the sky Bird.

That wild song
To the garden fell
And the Cage Bird heard it,
in his silver cell.
Are you free then, are you truly free?
Cried the Cage Bird.

Sky Bird flew
In the trail of the Sun
And swiftly he soared,
Away from the gerden
Sadly sang the Cage Bird, when the day was done;
Sang the Cage Bird.

*Leslie Narris*

1) Why was the Cage Bird happy?

............................................................

2) The Sky Bird's wings are wide, Why?

............................................................

3) Find another word the poet uses for
(a) cage : ........................ (b) happy : ........................

4) How did the Cage Bird sing at the end of the day? why?

............................................................

5) Write the line which means that the Sky Bird :
a) Sang a natural of uncontrolled song :
............................................................
b) Rose up to the sky quickly :
............................................................

**TEST 11**

**Read the flowing notice taken away frona news paper and answer the question given below.**

**FOODEX - 2012**
**Food trade Fair**
From 13 th - 16th July 2012, Tokyo, Japan
**The Export Promotion Board (EPB)**

is calling application from persons interested in promoting in the sale of the following items at the Foodex.

- Fruit and vegatable (Jams, chutneys, pickles and sauces)
- Tea (Green, herble, instant)
- Coconut product( Sweet, milk powder)
- Food items packed as gifts ( Gift packs)

Application should be made on the precribed form available at the Colombo office and the following provincial officers of the EPB.

- Central Province - First cross street, Kandy.
- North western Provonce - Hiriyaya Road, Kurunagala
- Southern Provonce - Devasiri Mawatha, Galle.

The completed application forms should be sent under reistered cover to reach

**The Derector,**
**Export Agricultural Division,**
**Sunmana Mawatta,**
**Colombo -2**

On or before 20th may 2012 **- CHAIRMAN (EPB)**

1) What is the foodex 2012?

............................................................

2) At how many offices can you get prescribed application forms?

............................................................

3) What cocount products can be sold at the foodex 2012?

............................................................

4) To whom should the application be sent?

............................................................

5) What should go into gift packs?

............................................................


**TEST 12**

**The following graph shows the expenditure incurred on different projects of the Social Service Clup of your village. Study the graph and write a description of it. Use 75 -100 words. Include the following:**

1) What the graph represents
2) What information is given horizontally
3) What information is given vertically

**Use the following words to complete and contrast the amount of money spent on the different projects.**

*less, least, many, more, most, equal, nearly, higher*




............................................................
............................................................
............................................................

**TEST 13**

**Fill in the balanks using to words in the list below. There are two extra words.**


Do you work to a time table? At school, the answer will be 'Yes' Since (1) ...................... have aclass time table (2) ...................... you which subject to (3) ...................... at a particular time. (4) you work to a (5) ............. at other too? That is an in the (6) ...................... at weekends or during (7) .............. if you don't, write (8) ...................... list of all the (9) .................. you have to do (10) ............. week - home work, preparing for tests etc. Then divide up the time. Leave some time for the activities youreally enjoy doing.

| | | | |
|---|---|---|---|
| a | do | evening | holiday |
| study | telling | this | time table |
| is | work | out | you |

**TEST 14**

**The following are some questions asked by an tourist about visition and the answers given by a tour guide. Match the questions with their corresponding answers and write the letter of the answer in the box given against each question.**

1) Are there many places to stay? ........................... F
2) Do many Chinese speak English? ......................
3) Are there many places to eat? ...........................
4) Is it easy to shop and where should I go? ..........
5) What are the good things to bring back? ...........
6) What are the interesting places I should not miss? ..............



A) Pleanty. Guide books give addresses of major restaureants and you can ask your guide to arrange a meal in them but you should also eat in an ordinary reastaurant. The Chineses eat early. Lunching at 11.30 to 12 noon, dinner form 5 p.m onwards.
B) "The great wall" and "Forbodden City" There is so much to see in Bejiing. You should certainly visit Marco Polo Bridge and the Lama Temple.
C) Silks of all sorts are very cheap in China, although selection of patterns is not always good. Silk can be bought as meters or as ready mades. Jewellery of all sorts from jade and pearls also make good presents.
D) So many young people in cities, speak good English. Guides, taxi drivers and shop keepers also speak some English.
E) There are "Friendship Stores" in every city for foreigners. They sell a wide range of luxuries such as silk, jade, leaquer, leather products etc. Shopping is easier in the friendship stores, but much more fun in the dimly - lit department stores.
F) Foreigners are encouraged to stay in the more luxurious hotels where double room with bath room will cost about 20$ a night, exclusive food.

**TEST 15**

**Your friend has written to say that he / she is coming to spend the next weekend with you. You whould like him / her to come next month as you are studying for the exam. Write a letter to**

**- say that you are happy she/he is comig**
**- suggest a postphonment for the next month**
**- mention how you would like to spend the weekend with him / her Write about 75 - 100 words.**

# ஆனையிறவு உப்பளத்தின் புனரமைப்பு முதற்கட்டம் இவ்வருடத்திற்குள் நிறைவு

## அமைச்சின் செயலாளர் செ.சிவஞானசோதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு உப்பளத்தைப் புனரமைத்து மீள ஆரம்பித்து இயங்க வைக்கும் நடவடிக்கை துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தகவல் தெரிவிக்கையில்,


1990 ஆம் ஆண்டு யுத்த அனர்த்தங்களினால் கைவிடப்பட்ட இந்த உப்பளத்தின் செயற்பாடுகள் 23 வருடங்களின் பின்னர் மகிந்த சிந்தனை தேசிய அபிவிருத்தி வரைபிற்கு அமைய வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இவ் உப்ப ளத்தை மீள ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்தது. இதன்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவின் வேண்டுகோளின பேரில் உப்பளத்தின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிப்பதறகாக இந்த வருடத்தின் மே மாதத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 100 மில்லியன் ரூபா நிதியினை வழங்கியது.

இதனையடுத்து புனரமைப்பு பணிகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் இப்பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தினால் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் தற்போது அவுஸ்ரேலிய அரசின் உதவியுடன் Dash நிறுவனத்தால் முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டன.

இதனை அடுத்து முதற்கட்ட புனரமைப்பு பணிகள் உட்கட்டுமான அபிவிருத்தி வேலைகள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அவை இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டு 1 ஆம் கடடத்தின் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன கட்டம் 1 பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் வருடாந்தம் 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பினை உற்பத்தி செய்ய முடியும் என எதிர் பார்க்கப்படுகிறது.

மேலும் இரண்டாம் கட்டத்தின் செயற்பாடுகள் 2015 ஆம் ஆண்டில் திறைசேரியின் நிதிகளைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப் படவுள்ளன.

இதன்மூலம் 30 ஆயிரம் மெற்றிக்தொன் உப்பை மேலதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்றும் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புக்களை உருவாக்க முடியும் எனவும் வருடாந்தம் 70 ஆயிரம் முதல் 1 இலட்சம் மெற்றிக்தொன் உப்பை உற்பத்தி செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.




அச்சுவேலி கதிரிப்பாய் வாகைமரத்தின் கீழ் நீண்ட காலமாக எவ்வித மண்டபமோ கூரை களோ அற்ற நிலையில் இருந்த வைரவர் ஆலயத்திற்கு ஒரு சிறு மண்டபத்தை அவ்வூர் மக்கள் அமைத்து வழங்கியுள்ளனர். நிர்மாணிக்கப்பட்ட புதிய மண்டபத்தின் தோற்றம்..... (85)

## வீதிபுனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

வரணி வடக்கு சூழா நின்ற புலமுருகமூர்த்தி ஆலயத்துக்கு செல்லும் வீதியின் புனரமைப்புக்கு சாவகச்சேரி பிரதேச சபை ஐம்பதாயிரம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதாக ஆலய நிர்வாக சபைத் தலைவர் க.குணரத்தினம் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் அடியார்கள் இவ்வீதியால் பெரும் இடையூறுகளை எதிர்நோக்கிய நிலையில் ஆலய நிர்வாகத்தினர் கடந்த வருடம் பிரதேச சபையிடம் முறையிட்டனர். இதனை அடுத்து புனரமைப்புக்கு அறுபது ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. எனினும் வீதி முழுமையாக பூர்த்தியடையாத நிலையிலேயே இவ்வருடம் மீதி வேலைகளுக்காக ரூபா ஐம்பதாயிரம் வழங்கியதாக அவர் மேலும் தெரிவித்தார். (150)



முல்லைத்தீவு மாவட்ட செயலக புதிய கட்டடப் பணிகளை வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி நேரில் சென்று பார்வையிட்டதுடன் துறைசார் அதிகாரிகளுடன் ஆளுநர் கலந்துரையாடினார்

## சைக்கிள் திருட்டு

வடமராட்சியில் இருந்து தென்மராட்சி பகுதியூடாக வயலுக்கு பசளை இட வந்தவர் தனது துவிச்சக்கரவண்டியை பறிகொடுத்தார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

குறித்த விவசாயி தனது வயல்நிலத்திற்கு பசளை இடுவதற்காக துவிச்சக்கர வண்டியில் வந்து முள்ளிக் கும் வடவரணிக்கும் இடைப்பட்ட வீதியோரத்தில் அதனை நிறுத்திவிட்டு சற்றுத் தூரத்தில் உள்ள தனது வயல்களுக்கு பசளை இட்டுவிட்டு திரும்பிவந்து பார்த்தபோது துவிச்சக்கரவண்டி திருட்டு போயுள்ளமை தெரிய வந்தது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட விவசாயி பின்பு வாகனம் மூலம் வடமராட்சிக்கு சென்று சேர்ந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.(150)

# தண்டனை விதிக்கப்பட்ட 3 மீனவர்கள் இதுவரை விடுவிக்கப்படாதது ஏன்?

## கேள்வி எழுப்புகிறார் என்.எம்.ஆலம்

இந்திய மீனவர்கள் 5 பேரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் கருணை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் எமது மீனவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. எமது மூன்று மீனவர்களின் நிலை என்ன? என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.எம்.ஆலம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த 2011ஆம் ஆண்டு போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் 5 பேரும் இலங்கை மீனவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது போதைப்பொருள கடத்தல் வழக்குப்பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், கடந்த மூன்று வருடங்களாக மேற்படி வழக்கு நடைபெற்று வந்தது.

இறுதியில் கடந்த 30.10.2014 ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றம் மேற்படி 8 நபர்களுக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இத்தண்டனை வழங்கப்பட்டது முதல், இதற்கு எதிரான கருத்துக்களும் போராட்டங்களும் இந்தியாவில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தன. இலங்கை மீனவர்களின் குடும்பங்களும் யாழ். ஆயர் இல்லத்துக்கு முன்பாக தமது கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்தனர்.

இருந்தும் வடமாகாணத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாணசபை உறுப்பினர்களும் எதுவித அக்கறையும் காட்டாது மௌனம் காத்தனர்.

ஆனால், இந்திய தமிழக அரசு மத்திய அரசும் இவ்விடயத்தில் தமது தரப்பு விடயத்தை இலங்கை அரசுக்கு மிகவும் அழுத்தமாக தெரிவித்து வந்துள்ளது.

இதன் பயனாக இந்திய மீனவர்களின் விடுதலை, இலங்கை ஜனாதிபதியின் கருணையின் அடிப்படையில் முடிவுக்கு வந்துள்ளது.

எம் நாட்டு மூன்று மீனவர்களும் விடுவிக்கப்படாதது ஏன் என்ற கேள்வி எமக்குள் உள்ளது. ஏனெனில், இவர்கள் வட பகுதி மீனவர்கள் என்பதாலா? அல்லது வடமாகாண அரசு இதற்கான அழுத்தத்தை கொடுக்கவில்லை என்பதாலா?. அல்லது இம் மீனவர்கள் தொடர்பாக எந்தக் குழுவும் அரசின் உயர் மட்டங்களை அணுகவில்லை என்பதாலா என்ற பல கேள்விகள் எம்முள் உள்ளன.

விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் தங்கள் மனைவி பிள்ளைகளுடன் மகிழ்ச்சியுடன் இணையும் அதேவேளை, எமது மக்கள் நாம் இந்திய மக்களாக இருந்திருக்க கூடாதா? அல்லது நாம் தமிழராக பிறந்தது குற்றமா? என்ற பல கேள்விகளுடன் கண் கலங்கி கண்ணீருடன் நிற்கின்றனர்.

எமது மீனவர்கள் மற்றும் பல வருடங்களாக எதுவித விசாரணைகளுமின்றி சிறையில் வாழும் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து மக்களும் சமூக ஆர்வலர்களும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும் என அவர் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெள்ளத்தில் மிதக்கும் மகாத்மா காந்தி வீதி



(யாழ்ப்பாணம்)

தற்போது தொடர்ச்சியாகப் பெய்துவரும் கனமழையால் நெல்லியடி மகாத்மா காந்தி வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் அவ்வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இவ்வீதி நீண்டகாலமாக எவ்வித புனரமைப்பும் இன்றி மோசமாக சேதமடைந்த நிலையில் உரிய வகையில் புனரமைக்கப்படாதிருந்ததை சுட்டிக் காட்டும் மக்கள் தற்போது பெய்து வரும் மழையினால் இவ் வீதி வெள்ள நீரில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

முன்னதாக இவ்வீதியை புனரமைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் குறித்த வீதி தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

எனவே உரியவர்கள் நீரில் மூழ்கியுள்ள குறித்த வீதியை பார்வையிட்டு நீர் வழிந்தோடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண் டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# ஜெயாவின் படங்கள் அலுவலகங்களில் முடிவெடுக்க 4 வார கால அவகாசம்



தமிழகத்தில் அரசு அலுவலகங்களில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் புகைப்படத்தை அகற்றக் கோரிய வழக்கில், 4 வாரங்களுக்குள் முடிவெடுக்குமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் படம் தமிழகம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களில் வைக்கப்பட்டிருப்பதாகவும், சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை பெற்ற அவரது படத்தை அரசு அலுவலகங்களில் இருந்து அகற்ற வேண்டும் எனவும் சென்னை உயர்நீதிமன்றத்தில் தி.மு.க எம்.எல்.ஏ. டி.ஆர். பி.ராஜா வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.கே. கவுல், நீதிபதி புஷ்பா சத்தியநாராயணன் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

மனுவை விசாரித்த நீதிபதிகள், "அரசு அலுவலகங்களில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் படத்தை வைத்துள்ளது தொடர்பாக 4 வாரங்களுக்குள் முடிவெடுக்குமாறு தமிழக அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிடுகிறது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலகச் செய்திகள்

# உயிரிழந்த பெண்களுக்கு கொடுக்கப்பட்ட மருந்தில் நஞ்சு



அண்மையில் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொண்ட பின்னர் உயிரிழந்த 15 பெண்களுக்கும் கொடுக்கப்பட்ட மருந்துகளில் எலி நச்சு இரசாயனம் கலந்திருந்ததாக சத்தீஸ்கரின் சுகாதார அமைசசர் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்ட மருந்துகளில் ஸின்க் பொஸ்பைட் என்ற நச்சு இரசாயனம் கலந்துள்ளமை பரிசோதனை மூலம் தெரியவந்துள்ளதாக சத்தீஸ்கர் மாநிலத்தின் சுகாதார அமைச்சர் அமார் அகர்வால் கூறியுள்ளார்.

இந்த இரசாயனம் எலி நஞ்சிலும் பயன்படுத்தப்படும் நச்சுப் பொருளாகும்.

இந்த மாதத்தின் ஆரம்பத்தில், அரசாங்கத்தின் இரண்டு சிகிச்சை முகாம்களில் அறுவைச் சிகிச்சைகளுக்கு உள்ளான 130 பெண்களில் 15 பேர் உயிரிழந்தனர்.

இந்த உயிரிழப்புகள் தொடர்பில், அறுவைச் சிகிச்சைகளை மேற்கொண்ட மருத்துவரும் இரண்டு மருந்துத் தொழிற்சாலைகளின் உரிமையாளர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# சீனாவில் நில நடுக்கம் 5பேர் பலி; 54 பேர் காயம்



(பீஜிங்)

சீனாவின் மேற்கு பகுதியில் உள்ள மலைப்பாங்கான இடத்தில் நிகழ்ந்த கடும் நிலநடுக்கத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளது. மேலும் காயமடைந்த 54 பேருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் ஆறு பேரின் நிலைமை தொடர்ந்து கவலைக்கிடமாக இருந்து வருகிறது. மேலும் ஐந்து பேர் படுகாயங்களுடன் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். மீதமுள்ள 43 பேர் சிறிய அளவு காயத்துடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் 25000 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும், 79,500 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 6,200 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளதாக அந்நாட்டு செய்தி ஊடகமான சின்ஹுவா தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை 4.55 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் மையப்புள்ளி சிச்சுவான் மாகாணம், காங்டிங் அருகே உள்ள டகாங் புற்நகர் பகுதியில் அமைந்தது குறிப்பிடத்தக்கது.

# தென்சீன கடற்பகுதியில் செயற்கைத்தீவு அமைப்பு

தென் சீனக் கடற் பகுதியில் உள்ள, ஸ்ப்ராட்லி தீவுப்பகுதியில், சீனா புதிதாக பெரிய தீவு ஒன்றை செயற்கையாக அமைத்து வருகிறது.

வியட்நாமுக்கு கிழக்கே தென் சீனக்கடலில் ஸ்ப்ராட்லி தீவுக்கூட்டங்கள் உள்ளன. இந்தத் தீவுக்கு சீனா, வியட்நாம், தாய்வான், பிலிப்பைன்ஸ், மலேசியா, புருனே ஆகிய நாடுகள் சொந்தம் கொண்டாடி வருகின்றன. இந்நிலையில் பிரச்சினைக்குரிய ஸ்ப்ராட்லி தீவுகள் பகுதியில் பெருமளவில் மண்ணை நிரப்பி சீனா புதிதாக பெரிய தீவு ஒன்றை அமைத்து வருகிறது. இந்த செயற்கைத் தீவு 3 கிலோ மீட்டர் நீளத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

இதற்கு முன்னர், பயரிகிராஸ் கடற் பகுதியில் சீனா 3 தீவுகளை உருவாக்கியுள்ளது. தற்போது அமைக்கப்படும் இந்தத் தீவு 4 ஆவது தீவு என்பது குறிப்பிடத்தக்கது.

# கென்ய இராணுவ தாக்குதலில் அல்ஷபாப் ஆயுததாரிகள் கொலை

கென்ய இராணுவத்தினர் நடாத்திய தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமான அல் ஷபாப் ஆயுததாரிகள் கொல்லப்பட்டுள்ளதாக அந்த நாட்டு பிரதி ஜனாதிபதி வில்லியம்ரூட்டு தெரிவித்துள்ளார்.

சோமாலியாவில் மேற்கொள்ளப்பட்ட இருவேறு தாக்குதல் நடவடிக்கையில் ஆயுததாரிகளின் யுத்த உபகரணங்கள் மற்றும் முகாம் ஆகியன அழிக்கப்பட்டுள்ளன.

எனினும் இந்தக் கூற்றை நிராகரித்துள்ள அல் ஷபாப் ஆயுததாரிகள் தமது உறுப்பினர்கள் பாதுகாப்பாக உள்ளதாக கூறியுள்ளனர்.

# நேட்டோ படைகள் தங்கியிருக்க ஒப்புதல் அளித்தது ஆப்கான்

அமெரிக்க இராணுவம் மற்றும் நேட்டோ படைகளுடனான பாதுகாப்பு ஒப்பந்தங்களை புதுப்பித்துக்கொள்ள ஆப்கானிஷ்தான் அரசுக்கு நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானுக்குள் கடந்த 2001ஆம் ஆண்டு முதல் அமெரிக்க படைகள் முகாமிட்டுள்ளன.

மேலும் அமெரிக்க படைகள் ஆப்கானிஸ்தானில் மேலும் ஒரு ஆண்டு நீடிக்க அமெரிக்க அதிபர் ஒபாமா ஒப்புதல் அளித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் நேற்று கூடியது. இதேபோல், சர்வதேச இராணுவமான 'நேட்டோ' படைகளுடனான பாதுகாப்பு ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்ளவும் அந்நாட்டு எம்.பி.க்கள் ஒப்புதல் அளித்துள்ளனர்.

# 1000 இளைஞர்கள் இணைவு

ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இங்கு தாங்கள் கைப்பற்றிய பகுதிகளை ஒருங்கிணைத்து தனிநாடு உருவாக்கியுள்ளதுடன் தங்களுக்கென்று தனியாக இராணுவமும் அமைத்துள்ளனர்.

இந்த நிலையில் மேற்கத்தய நாடுகளான ஜெர்மனி, மற்றும் சுவீடனில் இருந்து 1000 இளைஞர்கள் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பில் சேர்ந்துள்ளனர். சுவீடனில் இருந்து மட்டும் 400 முதல் 500 பேர் சேர்ந்துள்ளனர்.

# இந்தியர்கள் புனிதராக பிரகடனம்



கேரளாவில் வாழ்ந்திருந்தவர்கள் இருவர் உட்பட மொத்தம் ஆறு பேரை கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான போப்பாண்டவர் பிரான்சிஸ் புனிதராக அறிவித்துள்ளார்.

ரோம் நகரின் புனித பீட்டர்ஸ் சதுக்கத்தில் நடந்த வைபவத்தில் புனிதர்களாக அறிவிக்கப் பட்டவர்களுக்காக போப்பாண்டவர் சிறப்பு பிரார்த்தனையையும் நடத்தினார்.

இந்த வைபவத்தில் கலந்து கொள்வதற்காக ஐயாயிரத்துக்கும் அதிகமான கிறிஸ்தவர்கள் இந்தியாவிலிருந்து வத்திகான் சென்றிருந்தனர்.

இந்த நிகழ்ச்சியை ஒட்டி, கேரளாவிலும் நிறைய பிரார்த்தனைகளும் கொண்டாட்டங்களும் அரங்கேறியுள்ளன.

புனிதப் பட்டம் பெற்றுள்ள அருட்தந்தை குரியாகோஸ் ஏலியா சாவராவும், அருட்சகோதரி ஏவு பிராசியம்மாவும் மலபாரின் சிரியன் கத்தோலிக்க சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.

# பாதுகாப்பு விவகாரங்களில் தவறுகளை சகிக்கமுடியாது

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை



பாதுகாப்பு விவகாரங்களில் தவறுகளை இந்தியா சகித்துக் கொண்டிருக்காது என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் மனோகர் பரிக்கர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குர்கானில் இந்திய கடற்படையின் தகவல் முகாமைத்துவ ஆய்வு நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாம் தாக்குதலை விரும்பவில்லை.

இந்தியா வேறு எந்தவொரு நாட்டையும் ஆட்சி செய்யவில்லை.

இராமாயண காலத்தில் கூட, இலங்கைக்குச் சென்ற இராமன், அதனை ஆட்சி செய்யவில்லை. அதனை ஆட்சி செய்யும் பொறுப்பை விபீசணனிடம் கொடுத்தார்.

இந்தியா எந்தவொரு நாட்டையும் ஆட்சி செய்ததாக வரலாறு இல்லை. நாடு பலவீனமாக இருக்க முடியாது. பலமான பாதுகாப்பு வலுப்படுத்தப்பட வேண்டும்.

சக்தி பாதுகாப்புக்கும், உங்களின் சொந்த பாதுகாப்புக்கும் ஏனையவர்களை நம்பியிருக்க முடியாது. உங்களுக்கான எல்லா தளபாடங்களுக்கும் வெளிநாடுகளில் தங்கியிருக்கக் கூடாது.

சிறந்த கடற்படையைக் கொண்ட நாடுகள் தான் உலகை ஆட்சி செய்துள்ளன.

அதனால் தான் இன்று எமது அயல்நாடுகள், இந்தியப் பெருங்கடலிலும் ஏனைய பகுதிகளிலும், தமது கடற்படையை நிறுத்துவதற்கு முயற்சிக்கின்றன.

அவர்களைப் பற்றிய எல்லாத் தரவுகளையும் கடற்படைக்குக் கிடைப்பதை இந்த தகவல் முகாமைத்துவ ஆய்வு நிறுவனம் உறுதி செய்யும்.

முன்னெச்சரிக்கை உணர்வு மிகவும் முக்கியமானது. தவறுகளை இல்லாமல் செய்வதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். தவறுகளில்லாமை மிகவும் முக்கியம். என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நாட்டைக் காட்டிக் கொடுக்க நான் ஒருபோதும் தயாரில்லை

## - ஹர்சா டி சில்வா தெரிவிப்பு -

(கொழும்பு)

சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்துக்கு அரசாங்கத் தலைவர்கள் செல்வதை ஐக்கிய தேசியக் கட்சி அனுமதிக்காது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சா டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தாம் பயமின்றி பொதுமக்களிடம் இதனைக் கூறமுடியும் என்று ஹர்சா குறிப்பிட்டார்.

அல் ஜசீரா தொலைக்காட்சியில் உலகத் தமிழர் பேரவையின பேச்சாளர் சுரேன் சுரேந்திரனுடன் இடம்பெற்ற விவாதம் தொடர்பில் பொய்யான குற்றச்சாட்டு தம்மீது முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

விவாதத்தின்போது தம்முடன் பங்கேற்குமாறு அமைச்சர்



கெஹலிய ரம்புக்வெலவுக்கு அறிவித்ததாக அவர் குறிபபிட்டார்.

இந்தநிலையில் போர்க்குற்றம் தொடர்பில் அரசாங்கம் உள்நாட்டு விசாரணையை முன்னெடுப்பது போதுமானது என்று இதன்போது கூறியதாக ஹர்சா குறிப்பிட்டார்.

எனினும் சர்வதேச விசாரணை என்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை தாம் ஏற்றுக் கொண்டதாக தம்மீது அரசாங்கத் தரப்பினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேவேளை தாம் ஒரு சிங்களவன் என்ற அடிப்படையில் நாட்டை காட்டிக் கொடுக்கப் போவதில்லை என்று ஹர்சா கூறினார்.

# ஜனாதிபதி முறைமைக்கு எதிராக கொழும்பில் பிரசார யுத்தம்

## ஹெல உறுமய களத்தில்


நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையின் பிரதிகூலங்கள் என்ன என்பது குறித்து கொழும்பில் பிரசாரப் போர் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படுவது பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை ஜாதிக ஹெல உறுமய கட்சியினர் கொழும்பில் நேற்று விநியோகித்துள்ளனர்.

போர்க்குற்றச்சாட்டுகளை காரணம் காட்டி நாட்டின் ஜனநாயகத்தை முடக்குவதற்கு அரசாங்கத்துக்கு இடமளிக்க முடியாது என அக்கட்சியின் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சி உறுப்பினர்கள் கடந்த வாரம் தான் அரசாங்கப் பொறுப்புகளில் இருந்து விலகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளருக்கு தமது கட்சி ஆதரவு வழங்குவது பற்றிய தீர்மானம் விரைவில் வெளியிடப்படும் என அவர் தெரிவித்தார்.



நேற்று மாலை பருத்தித்துறை ஓடக்கரைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வீதி விபத்தில் காயமுற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள கரையோர இணைப்பாளர் குமாரை நேரில் சென்று நலம் விசாரிக்கும் வடமராட்சி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரனை காணலாம்.

### அரசு...

தாவவுள்ளனர் என்று வெளியான செய்தியை நேற்றுக் காலை இருவரும் மறுத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஐரோப்பிய...

எனவே பெருமளவில் இவ்வாறு ஏற்றுமதி செய்த மீனவர்கள் தற்போது பெரிதும் பாதிப்பை எதிர்நோக்கி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(25.இ)

### மகாநாயக்க...

தேரர்களை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மைத்திரிபால, தான் போட்டியிடவுள்ள கூட்டணியின் பெயர், சின்னம் போன்றவை அடுத்த ஓரிரு தினங்களில் மக்களுக்கு அறிவிக்கப்படும் எனக் கூறினார்.

தான் அரசாங்கத்தை விட்டு வெளியேறிய 72 மணி நேரங்களில் தனக்கு பலத்த மக்கள் ஆதரவு கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# விசர்நாய் கடிக்கு இலக்காவோர் தவறாது சிகிச்சை பெறவேண்டும்


## - நேற்றுவரை 1696 பேர் சிகிச்சை -

யாழ். போதனா வைத்தியசாலையின் விலங்கு விசர்நோய் சிகிச்சை நிலையத்தில் கார்த்திகை மாதம் 24 ஆம் திகதிவரை 1696 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 494 நோயாளர்கள் புதிதாக நாய்க்கடிக்கு இலக்காகியவர்கள் என்றும், 1202 நோயாளர்கள் கிளினிக் மூலம் சிகிச்சை பெற்றவர்கள் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

நாய்க்கடிக்குள்ளாகிய அனைவரும் ஊசி மருந்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், வளர்ப்பு நாய்களுக்கும் தடுப்பு மருந்து ஊசி போடப்பட வேண்டும் என்றும் அண்மையிலுள்ள மிருக வைத்திய நிலையத்தை அணுகுவதன்மூலம் அங்கு விலங்கு விசர்நோய் தடுப்பு ஊசி மருந்து போட்டுக்கொள்ள முடியுமென்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் விலங்கு விசர்நோய் சிகிச்சை நிலையம் தெரிவித்துள்ளது.

(பா)



கோண்டாவில் கிழக்கு நாகபூசணி அம்மன் ஆலய பாலஸ்தான நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது அங்கு வளர்க்கப்பட்ட ஹோமத்தில் நாகம் படம் எடுப்பது போன்று தீச்சுவாலை எரியும் அதிசயம் நிகழ்ந்தமை அடியார்களை மெய்சிலிர்க்க வைத்துள்ளது.

# மைத்திரியுடன் பேச ஹெல உறுமய தயார்

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த பொது வேட்பாளர் மைத்திரிபால் சிறிசேனவுக்கு உதவத் தயார் என்றும் இதற்காக அவருடன் விரைவில் பேச்சு நடத்தப் போவதாகவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தில் இருந்து பிரிந்து சென்ற ஹெல உறுமய கட்சி பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்கத் தயாரா என அக்கட்சியின் அத்துரலிய ரத்ன தேரரைக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அரசாங்கத்தின் நம்பிக்கையான உறுப்பினர்கள் பலர் அரசிலிருந்து வெளியேறுகின்றனர்.

இதற்கு அங்கு இருக்கும் சர்வாதிகாரப் போக்கே காரணம். ஜனாதிபதியையோ அவரது குடும்பத்தையோ நாம் எதிர்க்கவில்லை. அரசில் இருக்கும் ஒரு சிலரின் சர்வாதிகாரப் போக்காலேயே இன்று அரசுக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது. நாம் ஆரம்பத்தில் இருந்தே நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை நீக்கக் கோரி வருகின்றோம்.

பொதுவேட்பாளர் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாக வாக்களித்திருக்கிறார். இதனால் அவருக்கு ஆதரவாக நாம் செயற்படத் தயாராக இருக்கிறோம். விரைவில் அவருடன் பேச்சு நடத்துவோம் என்றார்.

### வடக்கு...

துங்கவிடம் கேட்டிருந்தேன். அதன் பின்னர், முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கவிடம் கேட்டிருந்தேன். அதன் பின்னர், ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்த போதும் கேட்டேன்.

ஆனாலும், ஒவ்வொரு ஆட்சித் தலைவர்களிடமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று கேட்டு தடை விதித்து வந்தனர்.

அரைகுறைத் தீர்வு, உளுத்துப்போன தீர்வு, ஒன்றுக்கும் உதவாத தீர்வு, இதை தும்புத்தடியால் கூட தொட்டுப் பார்க்கவும் மாட்டோம் என்று கூறி தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்து வந்தனர்.

இதனால் எதுவும் நடக்கவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தும் துணிச்சலும் அந்த ஆட்சித் தலைவர்களிடம் இருந்திருக்கவில்லை. விருப்பமும் இருந்திருக்கவில்லை.

ஆனாலும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த போது நாம் அவரிடம் கேட்டோம். அவர் மட்டுமே மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தியதன் மூலம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருந்தார்.

அதன் மூலம் நீண்ட காலமாக சகதிக்குள் புதைந்திருந்த அரசியல் தீர்வு என்ற தேரை வெளியே இழுத்து வந்திருக்கிறார். அந்தத் தேரின வடம்பிடித்து நாமும் இழுத்து வந்திருக்கிறோம்.

ஆனாலும், துரதிஷ்டவசமாக மாகாண சபை ஆட்சி அதிகாரம் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் போய்விட்டது. இதுவே தமிழ் பேசும் மக்களின் சாபக்கேடு.

இதனால், 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்து தொடங்கும் எமது அரசியல் தீர்வு நோக்கிய பயணம் தடைப்பட்டு நிற்கிறது.

தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் வைத்து தலைவர் சம்பந்தன் என்ன கூறினார் என்பதை சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டும்.

நடைமுறைச் சாத்தியமாக சிந்திக்க வேண்டும் என்றும், உணர்ச்சியூட்டும் பேச்சுக்களால் எதையும் பெற முடியாது என்றும், கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களை இழந்து விட்டோம் என்றும் கூறியிருந்தார்.

சம்பந்தன் மன மாற்றத்தில் இதை சொன்னாரோ, அல்லது தடுமாற்றத்தில் சொன்னாரோ என்பது அவரைச் சார்ந்தவர்களுக்கே வெளிச்சம்.

இவ்வாறு அவர் சொல்லி சில தினங்களுக்குள்ளேயே சொன்னதற்கு மாறாக உசுப்பேற்றும், சூடேற்றும் போலிக் கூச்சல்களை அவர்களே எழுப்பத் தொடங்கி விட்டார்கள்.

சூழலுக்கேற்றவாறு மதிநுட்ப சிந்தனையோடு செயற்படுவதற்கு மாறாக, சூழலுக்கேற்றவாறு சூளுரைத்துக் கொண்டிருப்பதே வழி என்று முன்னுக்குப் பின் முரணாகப் பேசி வருகிறார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### நிறைவேறியது...

நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவுசெலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து போட்டியிடுவதற்காக அரசாங்கத்திலிருந்து வெளியேறியிருந்த மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்கெடுப்பின்போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### எந்த...

பிரசார நடவடிக்கைகள் ஏற்கனவே வன்முறையை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றன.

அரசாங்கம் ஆட்சியின் மீது தனது பிடியை இறுக்குவதற்கு கடும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. இலங்கையில் மனித உரிமைகள், ஜனநாயகம், நீதி ஆகியவற்றை நிலைநிறுத்துவதற்கான. தனது முயற்சியின் ஒரு பகுதியாக, ஜே.வி.பி தன்னால் முடிந்தளவு போராடும் எந்த வேட்பாளருடனும் நாங்கள் மேடை ஏறப்போவதில்லை.

ஆனால் சில விடயங்கள் தொடர்பாக சில இடங்களில் இணைந்து பணியாற்றலாம். உதாரணத்திற்கு நீதியான, நேர்மையான தேர்தலுக்காக இணைந்து பணியாற்றுவோம். ஆனால் நாங்கள் எந்த வேட்பாளருக்கும் ஆதரவை வழங்க மாட்டோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சம்பிக்க எந்தப்பக்கம்?

# நாளை மறுதினம் தெரியும்



(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய தமது நிலைப்பாட்டை நாளை மறுதினம் வியாழக்கிழமை கொழும்பில் அறிவிப்பதாக கட்சியின் பொதுச் செயலாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜனநாயகம் மற்றும் நல்லாட்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக அவர் கொழும்பில் நேற்று குறிப்பிட்டுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய தற்போது தனது நோக்கத்தை மக்களுக்கு தெளிவுபடுத்தி வருகின்றது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக துண்டுப்பிரசுரங்களை விநியோகித்த கட்சியின் பொதுச் செயலாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மக்களை தெளிவுபடுத்தினார்.

மக்களை சந்தித்து அவர்களை தெளிவுபடுத்துவதோடு கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்கு ஜாதிக ஹெல உறுமய எதிர்பார்த்துள்ளது. நல்லாட்சி குறித்த பிரச்சினையை தீர்ப்பதே நாட்டின் முதலாவது தேவை என பாட்டலி சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

## தமிழ் வேட்பாளரை நிறுத்துகிறது நவசமசமாஜக் கட்சி

(கொழும்பு)

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், நவசமசமாஜக்கட்சி சார்பாக சுந்தரம் மகேந்திரன் போட்டியிடவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நவ சமசமாஜக் கட்சி சார்பாக விக்கிரமபாகு கருணாரட்ண கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். இந்நிலையில் இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில் மகேந்திரன் போட்டியிடவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் பிரதான வேட்பாளர்களாக போட்டியிடவுள்ளனர்.

## 3 பிள்ளைகளின் தந்தை 15 வயதுச் சிறுமியை வல்லுறவு

### சிறுமி வைத்தியசாலையில் அனுமதி

15 வயது சிறுமி ஒருத்தியை கடத்திச் சென்று ஒருமாத காலமாக சட்டவிரோத முறையில் வைத்திருந்து பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்ட 3 குழந்தைகளின் தந்தையார் ஒருவரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைமாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

திருமணம் முடித்து 3 பிள்ளைகளின் தந்தையான இந் நபருக்கு சார்பாக சட்டத்தரணி இஸமத் ஜமில் ஆஜராகி இருந்தார்.

சிறுமியை மாஞ்சோலை வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்குட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (170)

## ஆசிரியர் பிரமாண குறிப்பு அதிகாரிகள் முன் ஆய்வு

(கொழும்பு)

இலங்கை கல்விச் சமூக சம்மேளனம் அதிபர், ஆசிரியர்களுக்கான பிரமாணக் குறிப்பு பற்றிய கலந்துரையாடல் ஒன்றினை அட்டன் டிக்கோயா நகர சபை மண்டபத்தில் ஒழுங்கமைத்திருந்தனர்.

செயலமர்வில் வளவாளராக சம்மேளனத்தின் ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான கரேந்தின் கலந்துக் கொண்டார்.

ஆசிரியர், அதிபர், ஆசிரிய ஆலோசகர்கள், கல்வி அதிகாரிகள், என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துக் கொண்டனர்.

இந்நிகழ்வை ஒழுங்கமைப்பதில் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஆர்.சங்கரமணிவண்ணன், கல்விக் குழுத் தலைவர் எஸ்.குமார், பத்திரிகை மற்றும் பிரசாரக் குழுத் தலைவர் எம்.எஸ்.இங்கர்சால் முதலானோர் முனைப்புடன் செயற்பட்டுள்ளனர். (90)

## உச்ச நீதிமன்ற வியாக்கியானம் நாடாளுமன்றில் நேற்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி உச்ச நீதிமன்றின் சட்ட விளக்க ஆவணத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளது.

எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் ஜோன் அமரதுங்க இந்த ஆவணத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாம் தவணைக்காக போட்டியிடுவது மற்றும் இரண்டாம் தவணைக்காக பதவிப் பிரமாணம் செய்து கொண்டு நான்கு ஆண்டுகளின் பின்னர் ஜனாதிபதி தேர்தலுக்கு அழைப்பு விடுத்தல் ஆகியன தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உச்ச நீதிமன்றின் சட்ட விளக்கத்தை கோரியிருந்தார்.

கடந்த 10 ஆம் திகதி இந்த ஆவணம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த ஆவணத்தில் 29 பக்கங்கள் காணப்படுவதாக அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆவணத்தை ஹன்சார்டில் இணைத்துக் கொள்ளுமாறு ஜோன் அமரதுங்க கோரியுள்ளார். எனினும், இந்தக் கோரிக்கைக்கு சபாநாயகர் சமால் ராஜபக்ஸ இணங்கவில்லை என நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்ட விளக்க அறிக்கை தொடர்பிலான நம்பகத்தன்மை உறுதி செய்யாமல் ஹன்சார்டில் இணைத்துக்கொள்ள முடியாது என சபாநாயகர் சமால் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மூன்றாம் தவணைக்காக போட்டியிட முடியும் என சட்ட விளக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாடு அனுப்புவதாக கூறி 11 இலட்சம் ரூபா மோசடி

முல்லைத்தீவு உடப்பு பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் 11 இலட்சம் ரூபாவை வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி மோசடி செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு முல்லைத்தீவு பொலிஸாரினால் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

மேற்படி நபரை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி நபர் தொடர்பாக பலமுறைப்பாடுகள் கிடைத்து வருவதாக பொலிசார் மன்றில் தெரிவித்தனர். சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி பரஞ்சோதி ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (170)

## பொறுப்பேற்றார் யாப்பா



(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளராக அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா நேற்று கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று இது தொடர்பிலான நிகழ்வு நடைபெற்றது. இதேவேளை, கடற்றொழில் மற்றும் நீரியல் வளபிரதியமைச்சர் சரத்குமார குணரத்ன நேற்று கடற்றொழில் பதில் அமைச்சராக பதவியேற்றுள்ளார்.

இந்த நிகழ்வு கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சில் நடைபெற்றது.

## ஒலுமடு கிராமத்தின் நன்மைகருதி நடமாடும் பொலிஸ் சேவை நிலையம்

நெடுங்கேணி ஒலுமடுக் கிராமத்தில் நடமாடும் பொலிஸ் சேவை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி பெலிஸ் பொறுப்பதிகாரி நிஷாந்த ஹேரத் தலைமையில் 23.11.2014 அன்று ஒலுமடுக் கிராமத்தில் வட மாகாண பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்பின் பெயரில் பொலிஸ் நடமாடும் சேவையின் முதற்கட்ட சேவையினை ஒலுமடுக் கிராமத்தில் மாங்குளம் உப பொலிஸ் அத்தியட்சகர் பிரதம ரீதியாக கலந்து கொண்டு இந்நிலையத்தினை திறந்து வைத்துள்ளார்.

ஒலுமடு திரிசுட்டான், பட்டிக்குடியிருப்பு, கற்குளம், பட்டட விரிநத குளம் ஆகிய கிராம மக்களின் சேவை நலன் கருதி இப் பொலிஸ் நடமாடும் பிரிவு இக் கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் சேவை நிலையத்தில் முறைப்பாடுகள் களவு கொள்ளை போன்ற செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் இவ் சேவை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு பிரதம அதிதியாக நெடுங்கேணி பிரதேச சபை உறுப்பினர் பூ.பூபாலசிங்கம் ஆ.மகாலிங்கம் ஆகியோரும் பொது மக்களும் கலந்து சிறப்பித்துள்ளனர். (40)

## பாலபெத்தபெண்டி தலைமையில் இலஞ்ச, ஊழல் செயலமர்வு

### வடமாகாண அதிகரிகள் கலந்துகொண்டனர்




(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் அரச திணைக்களத்தில் கடமையாற்றும் அரச அதிகாரிகளுக்கான சட்ட ஒழுங்கு நிர்வாக கட்டமைப்பு மற்றும் இலஞ்ச ஊழல் தொடர்பான செயலமர்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இச்செயலமர்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின்தலைவர் பாலபெத்த பெண்டி,வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறிஆகியோர்கள் கலந்துகொண்டு இச்செயலமர்வினை ஆரம்பித்து வைத்தனர்.

இதில் சட்ட ஒழுங்கு நிர்வாகக் கட்டமைப்புச் செயற்பாடுகள் பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இதில் வடமாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஸ், மாவட்ட அரசாங்க அதிபர்கள் திணைக்கள அதிகாரிகள், இராணுவ, பொஸிஸ அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (25)

## ஆசிரியர் சங்கம் தலையீடு; அலவன்ஸ் வழங்க உடன் ஏற்பாடு

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்தின் தெல்லிப்பளை கோட்ட அதிபர் ஆசிரியர்களுக்கு இம்மாத அலவன்ஸ் இல்லை. வலிகாமம கல்வி வலயத்தில் தெல்லிப்பளை கோட்டத்தில் உள்ள அதிபர் ஆசிரியர்களுக்கு அண்மைய வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட அலவன்ஸ் இம்மாத வேதனத்துடன் வழங்கப்படவில்லை.

அவ்வலயத்தில் உள்ள ஏனைய கல்விக் கோட்டங்களுக்கு வழங்கப்பட்டும் தெல்லிப்பளைக்கு வழங்கப்படாமை குறித்து வலயக் கல்விப்பணிப்பாளருடன் தொடர்புகொண்டு உடனடியாக விசேட சம்பளப் பட்டியல் மூலம் வழங்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் வலயக்கல்விப்பணிப்பாளர் தெரிவிக்கையில்,

குறித்த கோட்டத்திற்குப் பொறுப்பான கோட்டக்கல்வி அலுவலரின் தவறு அதுவென்றும் அதனை தான் உடனடியாக நிவர்த்தி செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்விடத்தில் மாகாணக்கல்விப்பணிப்பாளரும், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், இதுபோன்ற தவறுகள் திருத்தப்படவில்லையெனில் தொழிற்சங்க ரீதியிலான நடவடிக்கைகளே அதற்கு விரைவில் பதில் சொல்லும் எனவும் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் எச்சரித்துள்ளார். (40)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 நவம்பர் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.